**விற்பனையாளர்கள் தேவை**

தரகு வழங்கப்படும்

திருமலை மாவட்டத்தில் மலைமுரசு பத்திரிகையை விநியோகிப்பதற்கு பகுதிநேர, முழுநேர விற்பனையாளர்கள் தேவை.

தொடர்பு: 159A, 2வது மாடி,
கடல்முக வீதி,
திருகோணமலை
0754252042



வைகாசி மாதம் 18ம் திகதி

June 01, 2013

# மலைமுரசு®

MALAIMURASU

அறைவு 01 இயம் 45

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

வார இதழ்

விலை – 20.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் பத்திரிகை


## மசகு எண்ணை இழுபறியில் பலியாகப் போகிறதா

# திருமலையின் அமெரிக்கத் தகவல் நிலையம்

(ஸ்ரீ)

திருகோணமலையில் அமெரிக்கத் தகவல் நிலையத்தினை அமைப்பதற்கு இலங்கை அரசு தன் எதிர்ப்பை வெளியிட்டுள்ளமையானது ஈரானுடன் மசகு எண்ணை விவகாரத்தில் அமெரிக்கா இலங்கை மீது எழுப்பியுள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதிலடியா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இப்பதிலடியால் திருகோணமலையில் அமெரிக்கத் தகவல் நிலையம் அமைவது தடுக்கப்படலாம் அல்லது மேலும் காலதாமதம் ஆகலாம் என்றே தெரியவருகின்றது.

திருமலையில் அமெரிக்கத் தகவல் நிலையமொன்றை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை அண்மையில் அமெரிக்கத் தூதரகத்தின் அமெரிக்க நிலையத்தின் பணிப்பாளரான கிறிஸ்தோபர் தீல் அவர்கள் திருமலை நகரசபைத் தலைவர் திரு. செல்வராசாவுடன் மேற்கொண்டிருந்தார். இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு உடனடியாகவே இலங்கை அரசின் வெளிவிவகார அமைச்சின் செயலாளரால் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அக்கண்டனத்தில் வெளிவிவகார அமைச்சின்.. 7

## திருமலைக் கொலைகளின் பின் உருவாக்கப்படவிருந்த சட்டமூலம் எங்கே? – இரா. சம்பந்தன்

(ஸ்ரீ)

திருமலைக் கொலைகளின் பின் உருவாக்கப்பட உத்தேசிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்ட, குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டோரையும் சாட்சிகளையும் பாதுகாத்தலும், அவர்களுக்கு உதவுவதற்குமான சட்ட மூலம் மாயமாகி விட்டதா? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் திரு. சம்பந்தன் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.

அந்த சட்டமூலத்தின் பிரதியும் ஹன்சாட் பிரதிகளும் என்னிடம் உள்ளன என்று தெரிவித்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் இது தொடர்பிலான விவாதம் 2008 யூன் 19 வரையிலும் நடைபெற்றது என்று தெரிவித்துள்ளதுடன் அந்த சட்டமூலத்தை அரசாங்கம் கைவிட்டுவிட்டதா? என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

திருகோணமலையில் மாணவர்கள் ஐவர் கொலை செய்யப்பட்டமை, மூதூரில் தொண்டு நிறுவன ஊழியர்கள் 17 பேர் படுகொலைச்செய்யப்பட்டமை போன்ற மோசமான மனித உரிமை மீறல்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் தொழிற்பாட்டை அவதானிக்கவென அரசாங்கம்.. 7

## மூதூரில் பட்டதாரிகள் சங்க ஒன்றுகூடல்

திருமலை மாவட்ட மூதூர் பிரதேசச் செயலகப் பிரிவின் இளம் பட்டதாரிகள் சங்கப் பொதுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை நடந்தேறியது. அந்-நஹார் மகா வித்தியாலயத்தில் நடந்த இக் கூட்டத்தை சங்கத்தின் தலைவர் வீ. ஜஷான் தலைமையில் நடைபெற்றது. அதன்போது பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கு நினைவுப் பரிசில்களும் சங்கத்தால் வழங்கப்பட்டன.

## சேருவிலவையும் பொலன்னறுவையும் இணைக்கும் புதிய வீதி

திருமலை மாவட்ட சேருவில பிரதேசத்தையும் பொலன்னறுவையின் சோமாவதி பிரதேசத்தையும் இணைக்கும் புதிய வீதியொன்றை அண்மையில் அமைச்சர் பசில் இராஜபக்ச திறந்து வைத்தார். இதற்கு "சரத் நிமால் சில்வா".. 7

## சம்பூரின் ஊடாக இலங்கையின் மீது பொருளாதார. தந்திரோபாயச் செல்வாக்கினை இந்தியா செலுத்தும் – த ஹிண்டு

இலங்கையின் மீது செல்வாக்குச் செலுத்தும் முக்கிய வழிகளில் ஒன்றாகவே சம்பூர் அனல் மின் நிலையத்தை இந்தியா கருதுவதாக இந்திய நாளிதழான த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் அண்டை நாடுகளின் மீது தனது செல்வாக்கினைக் உருவாக்கும் தந்திரோபாயமாகவே இந்தியா அவ் அண்டை நாடுகளின் உட்கட்டுமான அபிவிருத்திப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தும் தந்திரோபாய நகர்வைச் செய்து வருவதாக அந் நாளிதழ் மேலும் தெரிவித்துள்ளது.

இவ்வாறு இருக்கையில் இலங்கையில் இயங்கும் இலஞ்சத்திற்கு எதிரான அமைப்பு நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை சீனாவிற்கு வழங்கியதில் பெரும் முறைகேடுகள் நடந்திருப்பதாகக் குரல் எழுப்பியுள்ளது. நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை அமைக்கும் பணிகளைச் சீன நிறுவனத்திடம் கையளிக்கும் போது.. 7

## சட்டவிரோத மின்சாரம் தாக்கி மாணவி பலி

பொதுக் கிணற்றில் குளிப்பதற்காகச் சென்ற வேளை தவறுதலாக தெருவோர வேலியொன்றின் மீது தொட்டதால் மின்சாரம் தாக்கிப் பரிதாபச் சாவடைந்துள்ளார் மாணவியொருவர்.


13 வயதான வான் எல காவல்துறைப் பிரிவில் உள்ள பன்சல்கொடல் கிராம மாணவியான மதுவந்தியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 7

## மூதூரில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்

மூதூர் இந்துக் குருமார் சங்கத்தின் ஏற்பாட்டில் இரண்டு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன எதிர்வரும் 06.06.2013 அன்று விழுதுகள் அமைப்புடன் இணைந்து விதவைகளுக்கான விழிப்புணர்வுக்.. 7

## மனைவியின் சந்தேகத்தால் கணவன் தற்கொலை முயற்சி: உவர்மலையில் சம்பவம்

தன்னார்வத் தொண்டு நிறுவனச் சாரதியான தனது கணவனின் நடத்தையில் சந்தேகம் கொண்ட மனைவியின் நடவடிக்கைகளால் கணவன் நஞ்சுண்டு, நெருப்பேற்றித் தற்கொலைக்கு முயற்சித்த சம்பவம் ஒன்று 27ம் திகதி நிகழ்ந்துள்ளது. 7



## கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் புதிய கட்டிட அடிக்கல் நாட்டு விழா

(ஸ்ரீ)





7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmailcom
0754252042

## வணக்கம்

### ஆசிரியத்துவத்தில் தண்டனை!!!

அண்மையில் தாய் ஒருவர் தனது மகனுக்கு நிகழ்ந்த அவலமொன்றை வெளிப்படுத்தினார். திருமலை நகரத்தில் மகான் ஒருவரின் பெயருடன் இயங்கும் கல்வி நிலையமொன்றின் பெண் நிர்வாகி தனது மகனை தகாத வார்த்தைகளால் திட்டி, தடியினால் உடல்முழுவதும் அடித்து, வகுப்பிற்குள் அனுமதிக்காது மூன்று மணிநேரத்தின் பின் வீட்டிற்குத் திருப்பியனுப்பியதாக அழுதபடி தெரிவித்தார். "எனது மகன் படிக்க மாட்டான் என்பது எனக்குத் தெரியும் ஆனால் குழப்படி செய்யவும் அவனுக்குத் தெரியாது" என்று கூறிய அந்தத் தாய் தான் போய் அக்கல்வி நிலைய நிர்வாகியிடம் அடித்தமைக்கான காரணத்தைக் கேட்ட போது படிக்காமல் இருப்பதற்காகவே அந்தத் தண்டனையை வழங்கியதாக அவர் தெரிவித்திருந்தாராம்.

நாம் இங்கு சிந்திக்க வேண்டிய ஒன்று உண்டு. நாம் எந்த நோக்கத்திற்காக தண்டனையை வழங்குகின்றோமோ அந்த நோக்கம் வழங்கப்பட்ட தண்டனையால் எய்தப்படுகின்றதா? என்றே.

பெரும்பாலான தண்டனைகள் அதனது நோக்கத்தை அடைவதில்லை.

ஆசிரியன் இங்குதான் சாதாரண தண்டனையாளனிடமிருந்து வேறுபடுகின்றான். ஆசிரியனின் தண்டனை மாணவனை சரியான இலக்கு நோக்கி நகர்த்துமேயொழிய அந் நோக்கத்திலிருந்து மாணவனை விலகிப் போகச் செய்யாது. ஆனால் சாதாரண தண்டனையாளனின் தண்டனை என்பது தண்டனைதானேயொழிய அதற்கப்பால் அதன் தாக்கம் எப்போதுமெ உணரப்படுவதில்லை. அவ்வாறே அத்தண்டனை எம்மை வழிப்படுத்துவதுமில்லை.

ஒரு உண்மை ஆசிரியனின் தண்டனை என்றுமே மாணவர்களுக்கு உவப்பான ஒன்றே. காலம் சென்றாலும் நாம் அத்தகைய தண்டனைகளையே எமது ஞாபகக் குறிப்புகளில் பதிந்து வைத்திருக்கின்றோம். வெறுமனே அத் தண்டனைகளை மட்டுமல்ல. அதனைத் தந்த உண்மை ஆசிரியனையும் தான்.

ஆசிரியனின் தண்டனை என்பது தடியடியில் என்றுமே தங்கியிருப்பதில்லை. அத் தண்டனைகளில் ஒரு உணர்வு இருவருக்குமிடையே கடத்தப்படும். அந்த உணர்வின் வெப்பம் தாளாது தண்டனைபெற்றவன் மட்டும் அழுவதில்லை. தண்டித்த அந்த உண்மை ஆசானும் மனதினுள்ளே அழுகின்றான்.

தண்டனைகள் என்று உணர்வுபூர்வமாக மாறுகின்றதோ அன்று தான் தண்டனைகளால் நோக்கத்தை அடைய முடியும்.

தடிகளை கையேந்தும் உங்களிடம் நான் கேட்பதெல்லாம் ஓங்கி ஒரு அடி உங்களை அடித்து விட்டுத் தண்டனைக்குத் தயாராகுங்கள்.

# வடக்கின் தேர்தல் களத்தில் மு.காவின் புதிய யுக்தி

பொதுவாக வடமாகாணத்திலும், குறிப்பாக வன்னி மாவட்டத்திலும் முஸ்லிம்களின் வாக்குகள் சிதறடிக்கப்படாமல் அதனூடாக வடமாகாண சபையில் முஸ்லிம் பிரதிநித்துவத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்தில் வியூகமொன்றை வகுத்துச் செயல்படுவதற்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்வந்துள்ளது.

வடமாகாண முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சமகால அரசியல் சூழ்நிலை, வடமாகாண சபை தேர்தல் என்பன தொடர்பில் ஆராயும் நோக்கத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில், நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை அமைச்சரின் இல்லத்தில் நடைபெற்ற முக்கிய கலந்துரையாடலொன்றின் போதே இதுபற்றித் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ரீ.ஹஸனலி (செயலாளர் நாயகம்), முத்தலிப் பாவா பா'ரூக், பைசல் காசிம், கிழக்கு மாகாண அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமத் (பிரதித் தலைவர்) மற்றும் வன்னி மாவட்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதி உயர்பீட உறுப்பினர்கள், மக்கள் (பிரதேச சபை, நகரசபை) பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வட மாகாண சபைக்கான தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது மரம் சின்னத்தில் தனித்துப் போட்டியிடுவதா அல்லது இணைந்து போட்டியிடுவதா என்ற கேள்வி எழுந்தபொழுது அது குறித்து அலசி ஆராயப்பட்ட சந்தர்ப்பத்திலேயே மேற்கண்ட முடிவுகளை கருத்திற்கொண்டே இந்த முடிவு எட்டப்பட்டது.

இன்றைய சூழ்நிலையில் தனித்துப் போட்டியிடுவதா அல்லது இணைந்து போட்டியிடுவதா என்ற விடயத்தில் சூடான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. எவ்வாறாயினும், தேர்தல் தினம் பற்றிய அறிவித்தல் வெளியான பின்னரே எவ்வாறு போட்டியிடுவது என்பது பற்றிய இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இக்கலந்துரையாடலின் போது, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அரசாங்கத்தில் அதாவது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சியாக இருக்கின்ற போதிலும், வன்னியில் கட்சியின் ஆதரவாளர்கள் எதிர்க்கட்சியினர் போன்று நடாத்தப்படுவதாகவும், முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கு அநீதிகள் இழைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. அரசாங்கத்தின் அடிவருடிகள் செய்யும் அட்டகாசங்கள் பற்றியும் கூறப்பட்டது.

இந்நாட்டு முஸ்லிம்களின் அதிகபட்ச ஆணையைப் பெற்றுள்ள ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மிகவும் பொறுப்புணர்ச்சியுடனேயே தீர்மானங்களை மேற்கொள்ளும் என நம்பிக்கை தெரிவித்த கட்சியின் தலைவர் அமைச்சர் ஹக்கீம் வடமாகாண சபையில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை அதிகரித்துக்கொள்வதற்கான மிகச் சிறந்த உபாயம் ஒற்றுமையேயாகும் என வலியுறுத்தினார்.

# பாதுகாப்புக் கடவைகள் அமைத்துத் தருமாறு கோரிக்கை

தம்பலகாமத்தில் காணப்படும் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை காரணமாக உயிர் ஆபத்துக்கள் அதிகரித்திருப்பதாகவும் இதனால் பாதுகாப்புக் கடவை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தம்பலகாமம் பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.எம்.சுபியான் கோரிக்கை விடுத்துள்ளார். குறிப்பாக சிராஜ் நகர், அரபா நகர், 95ம் கட்டை ஆகிய பகுதிகளிலுள்ள புகையிரத வீதிக் கடவைகள் பேராபத்துமிக்கவையாக உள்ளன.

இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு பலமுறை அறிவித்துள்ள போதும் இதுவரை காத்திரமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. பொது மக்களின் போக்குவரத்து நலனைக் கருத்திற் கொண்டு மிகவிரைவில் பாதுகாப்புக் கடவைகளை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுப்பதாக அவர் தெரிவித்தார்.



## ஆசிய முரசு

# எவரஸ்ட் சிகரத்தை தொட்டு 60 ஆண்டுகள் – நேபாளத்தில் கொண்டாட்டங்கள் –

எவரெஸ்ட் சிகரத்தை முதல் முறையாக மனிதன் எட்டி 60வது ஆண்டு நிறைவடைந்துள்ளதை அடுத்து நேபாளத்தில் கொண்டாட்டங்கள் கலைக்கட்டியுள்ளன.

நியூசிலாந்தைச் சேர்ந்த மலையேறும் ஆர்வம் கொண்ட சர். எட்மண்ட் ஹிலாரி அவர்களும் ஷெர்பா டென்சிங் நோர்கே ஆகிய இருவரும் இந்த உலகின் மிகவும் உயரமான மலைச் சிகரத்தை 1953ஆம் ஆண்டும் மே மாதம் 29ஆம் தேதி அடைந்தார்கள்.

நியூசிலாந்தில் தேனி வளர்க்கும் தொழிலைச் செய்து வந்த சர் எட்மண்ட் ஹிலாரியும், அவரின் நேபாள ஷெர்பா டென்சிங் நோர்கேயும் அறுபது ஆண்டுகளுக்கு முந்தைய கால கட்டத்தில் கடல் மட்டத்தில் இருந்து 8848 மீட்டர் அதாவது 29 ஆயிரம் அடி இருக்கும் இச்சிகரத்தின் மீது ஏறியது மிகப் பெறும் சாதனையாக பார்க்கப்பட்டது.

பிரிட்டிஷ் அரசியாக இரண்டாம் எலிசபத் முடிசூட்டப்பட்ட நாளில் இவர்கள் உலகின் உச்சத்தை அடைந்த செய்தி லண்டனை எட்டியது.

அன்று முதல் இன்று வரை எவரெஸ்ட் சிகரத்தில் 5000 இற்கும் அதிகமானோர் ஏறியிருக்கிறார்கள். மனித முயற்சிக்கு இயற்கை அளிக்கும் இந்த உயரமான சவாலை எதிர் கொள்ள வேண்டும் என்ற ஆவல் அதன் பிறகு கணிசமாக அதிகரித்தது.

மலையேறுபவர்களுக்கு உதவும் கருவிகள் அறிவியல் முன்னேற்றத்தால் துல்லியமானவையாகவும், எடை குறைந்தவையாகவும் தற்போது உள்ளன. பருவநிலையையும், மலை மீதுள்ள ஐஸ் நகருவது குறித்தும் தற்போது உறுதியான தகவல்களை உடனுக்குடன் பெறும் வசதி உள்ளது.

# திருமலையில் கிறிஸ்தவ வாலிபர் சங்க தேசிய பேராளர் மாநாடு

நாட்பத்தெட்டாவது கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தின் தேசிய பேராளர் மாநாடு கடந்த சனிக்கிழமை திருகோணமலையில் இடம்பெற்றது. அலஸ்தோட்டம் மாதுமை அம்பாள் வித்தியர்லயத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வின் பிரதம அதிதியாக திருகோணமலை மறை மாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் கலந்துகொண்டிருந்ததோடு, கிறிஸ்தவ வாலிப சங்கத்தின் தேசிய தலைவர் பெளிசியன் மற்றும் திருகோணமலை மாவட்டத் தலைவர் கீத பொன்கலன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். நிகழ்வில், நாடுபூராகவும் இருந்துவந்த 175 பிரதிநிதிகள் கலந்து-கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# 7செ.மீ பென்சில் தலைக்குள்: மருத்துவர்கள் குழப்பம்

பெர்லினில் தலைப்பகுதியில் பென்சிலுடன் சுமார் 15 வருடங்கள் வாழ்ந்த வாலிபருக்கு அறுவை சிகிச்சை மூலமாக பென்சில் வெளியேற்றப்பட்டுள்ளது.

ஆப்கானை சேர்ந்த 24 வயது வாலிபர் பார்வை குறைபாடு, கடுமையான தலைவலி காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற வந்தார். இவரை தீவிரமாக பரிசோதித்த மருத்துவர்கள் சிடி ஸ்கானின் மூலமாக அவரது தலையில் ஏதோ ஒரு பொருள் இருந்ததை கண்டனர்.

ஸ்கானில் தெரிந்த பொருள் ஒரு பென்சில் என்பதை அறிந்த மருத்துவர்கள் திடுக்கிட்டனர். சுமார் 7 செ.மீ இருந்த அந்த பென்சில் எப்படி தலைக்குள் சென்றது எனக் குழம்பிய மருத்துவர்கள், அந்த வாலிபரிடம் விசாரித்தபோது, 15 வருடங்களுக்கு முன்னர் அவர் விளையாடுகையில் கீழே விழுந்து அடிப்பட்டதில் மூக்கில் இருந்து ரத்தம் வழிந்தது மட்டும்தான் அவருக்கு ஞாபகம் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அதிவேக நெடுங்சாலைத் திட்டத்தைக் கைப்பற்றியது சீனா

யாழ் - கொழும்பு அதிவேக நெடுஞ்சாலை அமைப்பு உள்ளிட்ட வீதிகள், நெடுஞ்சாலைகள், தொடருந்துப் பாதைகளை அமைப்பது உள்ளிட்ட போக்குவரத்துத் திட்டங்களில் முதலீடுகளை மேற்கொள்ள சீனா முன்வந்துள்ளது.


கொழும்பு - யாழ். அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம், கொழும்பு-கண்டி - குருநாகல் அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம், மாத்தறை - கதிர்காமம் அதிவேக நெஞ்சாலைத் திட்டம் ஆகியவற்றை மேற்கொள்ளவும் சீனா இணங்கியுள்ளது.

மேலும், அத்தனகல, மினுவாங்கொட, குருநாகல் பகுதிகளில் நீர்விநியோகத் திட்டங்களில் முதலீடு செய்யவும், கண்டியில் அனைத்துலக மாநாட்டு மண்டபத்தை நிறுவவும், அனுராதபுரத்தில் கலையரங்கு ஒன்றை அமைத்துக் கொடுக்கவும், கொழும்பு மற்றும் ராகம மருத்துவமனைகளை அபிவிருத்தி செய்யவும் சீனா உதவ முன்வந்துள்ளது.

## செய்மதியை வழங்குவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்து



இலங்கைக்கு அதன் முதலாவது தொடர்பாடல் செய்மதியை வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் சீனாவின் கிரேட் வோல் கைத்தொழில் கூட்டுத்தாபனம் கையொப்பமிட்டுள்ளது இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது. .



இந்த செய்மதி இலங்கைக்கும் அதன் அயல் நாடுகளுக்கும் தொலைத்தொடர்பு மற்றும் ஒலி, ஒளிபரப்புச் சேவைகளை வழங்கும். பல நாடுகள் இலங்கையிடமிருந்து இந்த சேவைகளை வாங்குவதற்கு விருப்பம் கொண்டுள்ளன என "சைனா டெய்லி" கூறியுள்ளது.

இதுவரையில் 18 நாடுகளுக்கு 43 செய்மதிகளை ஏவிக்கொடுத்துள்ளதாக இந்த சீன கம்பனி கூறியுள்ளது. 2015ஆம் ஆண்டளவில் உலக செய்மதி சந்தையில் 10 சதவீதத்தை பிடிக்க சீனா எண்ணியுள்ளது என இந்தக் கம்பனி கூறியுள்ளது.

## தாய்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையில் நான்கு உடன்படிக்கைகள்

தாய்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையில் நான்கு மிக முக்கிய உடன்படிக்கைகள் கைச்சாத்தாகவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

த பெங்கொக் போஸ்ட் என்ற இணையத்தளம் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

தாய்லாந்தின் பிரதமர் யிங்லக் சின்வேட்ரா எதிர்வரும் வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கிறார். இந்த விஜயத்தின் போது, சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம், இராஜதந்திரிகள் மற்றும் முக்கிய அதிகாரிகளது கடவுச் சீட்டுகளை வைத்திருப்போருக்கு, இரண்டு நாடுகளுக்கும் வீசா தேவையில்லை என்ற உடன்படிக்கை மற்றும் இரண்டு நகர இணைப்பு ஆகிய நான்கு உடன்படிக்கைகள் கைச்சாத்தாகவுள்ளன. இதன்படி, கண்டி நகரமும், தாய்லாந்தின் ஆயுத்தியா நகரமும் ஒன்றிணைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஒரு மரணம் – இரு முகங்கள்

பிக்கு ஒருவர் தனக்குத் தானே தீமூட்டித் தற்கொலை செய்துகொண்டதன் பின்னர் ஜாதிக ஹெல உறுமயவின் இரு முகங்கள் வெளிப்படத் தொடங்கியுள்ளன.

இம் மரணத்தின் பின் உடனடியாக சர்வதேசச் செய்தியூடகம் ஒன்றிற்கு செவ்வியிட்ட ஜா.ஹெ.உ வின் செயலர் ஓமல்பே சோபித தேரர் விசாகப் பூரணை தினத்தில் பிக்கு ஒருவர் இவ்வாறு தற்கொலை செய்து கொண்டது நல்லதல்ல எனத் தெரிவித்திருந்தார். மேலும் தற்கொலையானது நிச்சயமாகக் கண்டனத்திற்குரிய விடயம் எனத் தெரிவித்திருந்த அவர் உன்னதமான காரணங்களுக்குத் தற்கொலையென்பதை ஏற்றுக்கொள்வதைப் பற்றிச் சிந்திக்கலாம் என்றும் தெரிவித்திருந்தார்.

ஆனால் அதன் பின் உள்நாட்டில் கருத்துத் தெரிவித்த ஜா.ஹெ.உ வின் தலைவர் அத்துரலியே ரத்தன தேரர் உன்னதமான நோக்கம் ஒன்றிற்காகவே தேரர் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்றும் யாதாயினும் மக்களின் நலனுக்காக அவர் எப்போதுமே தனதுயிரை மாய்க்கச் சித்தமாக இருந்தார் என்றும் தெரிவித்திருந்தார்.

## ஆஸி செல்ல முயன்ற 52பேர் கைது

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா சென்றதாக கூறப்படும் 52 பேர் சிலாபம், தொடுவாவ கடற்பிரதேசத்தில் புதன்கிழமை கைது செய்யப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 11 பெண்களும், 20 சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர்: கைது செய்யப்பட்டவர்கள் கடல் மார்க்கமாக கொழும்புக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளதாக கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, சிலாபம் மற்றும் நீர்கொழும்பு பகுதியினை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கடற்படையினர் இவர்கள் தொடர்பில் தொடர்ந்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## சிறைக் கைதிகளின் உளநலனை மேம்படுத்த திட்டம்

சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வரும் சிறைக் கைதிகளின் உளச் சுகாதாரத்தை விருத்தி செய்ய விசேட திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக உளநல விசேட நிபுணர்கள் மூவரை வெலிக்கடை, போகம்பர மற்றும் மஹர சிறைச்சாலைகளுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சின் உளநல பிரிவின் பணிப்பாளர் டொக்டர் ரசாஞ்சலி ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளில் உளநலம் பாதிக்கப்பட்ட கைதிகள் இருப்பதாகவும் அவ்வாறனவர்களை தெரிவுசெய்து அவர்களுக்கு விசேட உளநல பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சடலத்துக்காக இரு பிக்கு அணிகளிடையே மோதல்

மிருகவதையை எதிர்த்து தீக்குளித்து உயிரிழந்த பிக்குவின் சடலத்துக்காக இரண்டு பௌத்த அமைப்புகளிடையே ஏற்பட்ட மோதலால் கொழும்பில் நேற்று பெரும் அமளி ஏற்பட்டது.

தீக்குளித்து உயிரிழந்திருந்த வண.போவத்த இந்திரரட்ன என்ற பிக்குவின் சடலம் வைத்தியசாலையில் இருந்து எடுத்து வரப்பட்டு பொரளையில் உள்ள ஜயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டிருந்தது.

அந்தச் சடலத்தை இறுதிக்கிரியைகள் செய்வதற்காக பிக்குகளின் ஒருசாரார் இரத்தினபுரி கஹவத்தை ஸ்ரீசுகத விகாரைக்கு எடுத்துச் சென்று விட்டனர். ஆயினும் இதனையறிந்த சிஹல ராவய என்ற பிக்குகள் அமைப்பு "எமக்குத் தெரியாமல் எப்படி சடலத்தை கொண்டு செல்ல முடியும். எம்மிடம் தான் சடலத்தை ஒப்படைக்க வேண்டும்." என்று கொந்தளித்தது.

பின்னர் அந்த அமைப்பைச் சேர்ந்த பிக்குகளுக்கும் ஏனைய பிக்குகளுக்கும் இடையே பொரளை மலர்ச்சாலைப் பகுதியில் மோதல் வெடித்தது. இதனைக் கட்டுப்படுத்த பொலிஸார் எடுத்த முயற்சிகளும் பயனளிக்கவில்லை.

அதன்பின்னர் சிஹல ராவய அமைப்பைச் சேர்ந்த பிக்குகள் அலரி மாளிகைக்கு பேரணியாகச் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் காலி வீதியின் கொள்ளுப்பிட்டிச் சந்தி நேற்று சிலமணி நேரம் மூடப்பட்டது.

எனினும் தொடர்ந்து பதற்றநிலை நீடிப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன. பிக்குகளின் மோதலால் வெசாக் கொண்டாட்டங்கள் களையிழந்தன.

## தம்பலகாமத்து கல்வெட்டுப் பற்றிய புதிய சிந்தனைகள்

ஜீவராஜ்

இவை குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளும்போது இது தொடர்பான சில விபரங்களை தடையங்களை அல்லது செவிவழிமூலமான செய்திகளையும் ஆய்வுக்குத் துணையாக எடுத்துக்கொள்வது பயனுள்ள ஒரு விடயமாக அமையும் என நாம் நம்புகிறோம்.

போர்த்துக்கீசர் கோணேசர்கோயிலை இடித்து அழித்த பின்னர் 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயில் தோற்றம் பெற்றதாக வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர்.

தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயிலுக்குப் பின்புறமாக உள்ள தம்பலகாமம் புதிய குடியேற்றக் காணிகளுக்குச் செல்லும் பாதையில் சுமார் 250 மீற்றர் தூரத்தில் சுமார் பத்து அல்லது15 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காட்டுப்பகுதி இன்றும் "கோட்டை" என அழைக்கப்பட்டு வருகிறது. பழமையில் இது சிறிய கோட்டையாக இருந்ததாகவும் இக் கோட்டையைச் சுற்றி அகழிகள் இருந்ததாகவும் காலப்போக்கில் இவையெல்லாம் சிதைந்து அழிவுற்றுவிட்டன என்றும் வயதில் முதிந்தோர்கூறுகின்றனர்.

கலிங்க மாகனின் படையணியொன்று இக்கோட்டையில் இருந்ததாகவும் "தம்பன்" என்ற கலிங்கப்படைத் தளபதி இக்கோட்டையின் தளபதியாக இருந்ததாகவும் வீரஞ்செறிந்த அத் தளபதி கிழக்கிலங்கையில் மாகனுக்கெதிராகச் செயல்பட்டோரை புறங்கண்டு "தம்பன் கடவை" வரையில் கலைத்துச் சென்றதாகவும் சொல்லப்படுகிறது.

"தம்பன் கடவை" என்பது பொலனறுவை ஊடாக மட்டக்களப்புக்குச் செல்லும் பாதையில் "மன்னம்பிட்டிக்கு" அருகாண்மையில் அமைந்துள்ளது.

இதேபோல தம்பலகாமத்திலிருந்து 6 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள "கப்பல்துறையில்" தம்பலகாமத்து இளைஞர்கள் "திரைகடலோடியும் திரவியம் தேடினர்" என வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. இந்தக்கடல் [illegible] கப்பல்துறை[illegible] பொருளீட்டிய காரணத்தினாலும்



தம்பலகாமம் ஒரு பட்டினமாகக் காணப்பட்டது எனக்கருதுவதில் எவ்வித [illegible]

[illegible]குளக்கோட்டன் காலத்தில் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயில் பாவநாசத் தீர்த்தம் கப்பல்துறை கடலோரமாக அமைந்திருந்தது.

தற்பொழுது ஆலங்கேணிக் கிராமத்திற்கருகில் உள்ள கங்கையாற்றில் ஆதிகோணநாயகரின் தீர்த்தோட்சபம் நடைபெற்று வருகிறது எனினும் ஆதிகோணநாயகர் கோயிலில் வைராவியார் குடும்பத்தினர் பழமையில் நடைபெற்ற கிரிகைகளை ஞாபகத்தில் கொண்டு கப்பல்துறைக்குச் சென்று கடலோரத்தில் அமைந்துள்ள ஓர் இடத்தில் இச்சடங்குகளை வருடாவருடம் நிறைவேற்றி வருவது இன்றும் நடைமுறையிலுள்ளது.

"தம்பைநகர்" எனப்புராணங்களிலும் கோணேசர் கல்வெட்டிலும் விளிக்கப்படும் தம்பலகாமம் கப்பல் துறையையும் தன்னகத்தே கொண்டது என்பது இவ்விடத்தில் சுட்டிக்காட்டுதல் மிகப் பொருத்தமானதாகும்.

இவ்விடயங்களை எல்லாம் ஒருங்கிணைத்துப் பார்க்கும் பொழுது எண்ணூறு வருடங்களுக்கு முன்பு தம்பலகாமம் ஒரு வீர பட்டினமாக வீரகணமொன்றின் காவலிலுள்ள வணிகப் பெருநகராக விளங்கியிருக்க வேண்டும் என்பது வெள்ளிட மலையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிதாப மரணங்கள்!...

## பிண்ணனியில் வெளிநாடு செல்லும் தாய்மார்கள்!

அண்மையில் திருகோணமலையில் தாய்மார்கள் வெளிநாடு செல்வதால் சிறுவர்கள் சரியான கவனிப்பும், பராமிப்புமின்றி இழக்கப்படும் நிலை பல ஏற்படுகிறது. இதன்படியான ஒரு சம்பவம் திருகோணமலை வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பூமரத்தடிச் சேனையில் நடந்துள்ளது. பசுப்பாலை பாதுகாக்க பயன்படுத்தும் ஜதரசன் பரவொட்சைட்டை குடித்த இரண்டரை வயது பால்கி பரிதாப கரமாக பலியான சம்பவமே அதுவாகும். வியாழக்கிழமை (16.05.13) காலை 11.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.


இச்சம்பவம் பற்றி சேருநுவர பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். இச்சம்பவத்தில் கணேசமூர்த்தி சர்மி என்ற பாலகியே இவ்வாறு பரிதாபகரமாக பலியாகியுள்ளார். இச்சம்பவம் பற்றி மேலும். தெரியவருவதாவது... குறித்த பிள்ளையை வைத்திருந்த அம்மம்மா வழமைபோல் தமது பால் விற்பனைக்காக பூநகரில் உள்ள பால்சேகரிப்பு நிலையத்திற்கு தமது வீட்டில் சேரும் பாலை கொண்டு சென்று விற்பனை செய்யச் சென்றுள்ளார். விற்பனை முயற்சி செய்கையில் அவருடன் சென்ற இந்த சிறுமி அந்நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த ஜதரசன் பரொட்சைட்டை எடுத்து குடித்துள்ளார். இதனையடுத்து உடனடியாக ஈச்சிலம்பற்று வைத்திய மனைக்கு எடுத்துச்சென்ற போதும் அங்கு அம்பியுலன்ஸ் வண்டி இருக்காமையினால் பின்னர் உறவினர் ஒருவர் மூலம் பல மையில்கள் தொலைவில் உள்ள மூதூர் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். அவ்வாறு சென்ற போதும் சிறுமி மரணமானதாக தெரிவிக்கின்றனர்.

இதேவேளை சிறுமியின் தாயார் மத்தியகிழக்கிற்கு வேலைவாய்ப்புத்தேட பயிற்சி ஒன்றிற்கு கொழும்பு சென்ற நிலையில். அம்மம்மாவின் பாதுகாப்பில் பிள்ளை இருந்த வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இச்சம்பவம் பலராலும் பரிதாபகரமாக பாார்க்கப்படுகின்றது.

இதனையடுத்து சேருவில பொலிசார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.ஈற்றில் வெள்ளியன்று சிறுமியின் உடல் ஒப்படைக்கப்பட்டு நல்லடக்கம் மாலையில் இடம்பெற்றது. இச்சம்பவம் இக்கிராமத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறே மேலும் ஒரு சம்பவம் அதே நாளான 16.05.13 நடந்துள்ளது.இது திருகோணமலை கிண்ணியாப்பகுதியில் பதிவாகியுள்ளது. அதாவது கடந்த வியாழக்கிழமை தொட்டில்கயிறு கழுத்தில் இறுகி சிறுவன் ஒருவர் பலியான சம்பவமே அதுவாகும். கிண்ணியா கட்டையாற்றுப் பகுதியில் நடந்த இச்சம்பவத்தில் பலியானவர் தரம் 5ம் ஆண்டில் கல்வி பயிலும ஜிப்பிரி அகில் (10 வயது) என்ற மாணவனாகும்.பெரிய கிண்ணியா ஆண்கள் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவனே இவ்வாறு பலியானதாக கிண்ணியா பொலிசார் தெரிவித்தனர். சடலம் விசாரணைக்காக கிண்ணியா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.மேலதிக விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர். இவனது தயாார் மத்திய கிழக்கில் பணிபுரிவதுடன் தந்தை கொழும்பில் பணிபுரிவதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

*(கலாதரன்)*




உலகில் நடைபெறும் வர்த்தகங்களில் கூடியளவு வருமானம் தரும் வர்த்தகம் எது தெரியுமா ? நாம் உடனடியாகச் சொல்வது போதைப் பொருள் வர்த்தகத்தைத்தானே. ஆனால் உண்மையில் அவ்வாறில்லை. உலகின் முதல்தர வருமானம் கொலிக்கும் வர்த்தகம் ஆட்கடத்தல் (Human Trafficking ) தான்.

அண்மையில் இலண்டன் டெய்லி மெயில் எனும் பத்திரிகை வெளியிட்ட செய்தியொன்றின் பின்னால் இந்த ஆட்கடத்தலின் மற்றுமொரு முகத்தைத் தெரிந்துகொள்ள முடிந்தது. ஆம் ஆட்கடத்தலின் பின் பெண் ஒருவர் சுமார் நான்கு வருடங்களாக மூன்று இலண்டன் வாசிகளால் அடிமையாக பயன் படுத்தப்பட்டதுடன் அம் மூவரில் ஒருவரான 54 வயதுடைய ஆணினால் பாலியல் அடிமையாகவும் பயன்படுத்தப பட்டிருந்தாள்.

வருடாந்தம் சுமார் 100 பில்லியன் அமெரிக்க டொலர்கள் புரளும் வர்த்தகமாக இம் மனிதக்கடத்தல் மாறியுள்ளது. அதாவது நாளொன்றுக்கு 825 இலட்சம் டொலர் புரளும் வர்த்தகமாக மனிதக் கடத்தல் மாறியுள்ளது. அவ்வளவு தொகை புரளும் வர்த்தகத்தில் வருடாந்தம் 20 தொடக்கம் 27 மில்லியன் மக்கள் கடத்தப்படுகிறார்கள். இவ்வாறு கடத்தப்பட்டவர்களுள் வெறும் 42,921 பேர் மட்டுமே 2011ம் ஆண்டில் மீளக்கிடைத்துள்ளனர். மூன்று பேரால் இலண்டனில் அடிமைப்படுத்தட்ட பெண் இந்தியாவின் பீகார் மாநிலத்தை சேர்ந்தவள் கல்வியறிவு குறைவான அப்பெண் "செவிலித்தாய்" வேலைக்காக இலண்டனுக்கு கடத்தப்பட்டுள்ளாள்.

இப்பெண்ணை 33 வயதான சமீனா யூசுப் என்ற பெண்ணே முதலில் வேலைக்கு அமர்த்தியுள்ளார். அந் நாளில் இருந்து சுமார் 16 மணித்தியாலங்கள் நாளொன்றுக்கு வேலை செய்ய வேண்டியிருந்தது.

சமீனா யூசுப்பிடம் தனது கடவுச்சீட்டையும் கொடுத்துவிட்ட அவ் இந்தியப் பெண்ணால் அதன்பிறகு அந் நரகத்திலிருந்து வெளிவர முடியவில்லை. சில காலங்களின் பின் 54 வயதுடைய ஒபரோய் என்ற பெண்ணின் வீட்டு வேலைக்காகக் கடத்தப்பட்ட அந்த இந்தியபெண் அங்கு மின்னழுத்தியால் சுடப்பட்டும் ஊசிகளால் குற்றப்பட்டும் துன்புறுத்தப்பட்டுள்ளார். பின்னர் 54 வயதான இறைச்சி வெட்டும் என்கார்ட்டா பவபோவி என்பவனிடம் கையளிக்கப்பட்ட இப்பெண் பாலியல் அடிமையாகவும் ஆக்கப்பட்டாள். "அவனுடைய பாலியல் உறவின் பின்னரெல்லாம் என்னால் எதுவுமே செய்ய முடியாது வலியுடன் வாழ்ந்தேன்" என அவ் இந்தியப்பெண் விசாரணையின் போது தெரிவித்துள்ளாள்.

தை 01ம் திகதி முதல் சித்திரை 20ம் திகதி வரை சுமார் 680 குழந்தைகள் இந்தியாவின் டெல்லிப் பிரதேசத்தில் மட்டுமே காணாமற்போயுள்ளன. அவற்றில் சுமார் 400 குழந்தைகள் பெண் குழந்தைகள் ஆகும்.

அயல் நாட்டின் இந் நிலை எமது நாட்டுக்கும் தொற்றிக்கொள்ளும். குழந்தைகள் இனிக் காணாமற் போகலாம் கவனம்.




# இராவணன்

கம்பராமாயணம் தமிழர்களை இழிவுபடுத்தும் காப்பியமே என்பதை நாவலர் சோமசுந்தர பாரதியாருடனும், அறிஞர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களுடனும் மேடையில் வாதிட்டு வென்று காட்டினார் பேரறிஞர் அண்ணா. அடுத்தவன் எழுதியதைக் குற்றம் சொல்லத்தான் தெரியுமா? தமிழனின் பெருமையை உணர்த்தும் விதத்தில் உங்களால் ஒரு காப்பியத்தை படைக்க முடியுமா என்ற கேள்வி எழுப்பியவர்களும் அப்போது உண்டு. அத்தகையவர்களின் வாயை அடைக்கும் விதத்தில் புலவர் குழந்தை அவர்களால் படைக்கப்பட்டதுதான் இராவண காவியம். வால்மீகி, கம்பர், துளசிதாசர் இன்னும் பலர் எழுதிய இராமாயணங்களில் உள்ள செய்திகளையே அடிப்படையாகக் கொண்டு, இராவணன் மீது சுமத்தப்பட்ட பழியைத் துடைக்கும் மாற்றுக் காப்பியத்தைப் படைத்தார் புலவர் குழந்தை. அவரது படைப்பு, கற்பனைப் பாத்திரமான இராவணனின் பழியை மட்டும் துடைக்கவில்லை. நெடிய பாரம்பரியம் கொண்ட தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டுப் பெருமைகளையும் மீட்டெடுத்தது. இலக்கியத்தின் இலக்கு எதுவாக இருக்கவேண்டுமோ அதனை உணர்ந்து செய்யப்பட்டதே இராவண காவியம் எனும் பெருங்காப்பியம் குடும்பம் இராவணனது தந்தை வைச்ரவ மகரிஷி ஆவார். வீடணன், கும்பகர்ணன், சூர்ப்பணகை ஆகியோர் உடன் பிறப்புகளாவர்.

### வேத வித்தகன்

இராவணன் சாம வேதத்தில் நிபுணத்துவம் பெற்றவன். இதனை இராமாயணமே எடுத்தியம்புகிறது. இவன் தனது கை நரம்புகளால் சாம கானம் பாடி சிவனை மகிழ்வித்ததாகவும் இராமாயணம் கூறுகின்றது. கைலாயத்தைத் தூக்கும் இராவணன் (இராவணன், பத்துத் தலை கொண்ட இலங்கை அரசன். இராமனுக்கு எதிரியான இவன் மிகச் சிறந்த சிவபக்தன். புராணங்களில் இராட்சசனாகச் சித்தரிக்கப்படுபவன்.) கைலாயத்தை தன் நாட்டில் வைக்க விரும்பிய இராவணன் வடக்கே சென்று, எந்த வித கடினமும் இல்லாமல் இமயத்தைத் தூக்கி தன் நாடு நோக்கி நடந்தான். மலையில் திடீரென ஏற்பட்ட ஆட்டத்தை உணர்ந்த பார்வதி தேவி பாதுகாப்பு வேண்டி சிவனிடம் ஓட, நடந்ததை அறிந்த சிவன், இராவணனுக்கு ஒரு பாடம் புகட்ட விரும்பி தன் இடது கட்டைவிரலால் மலையை சற்று அழுத்த, தப்பிக்க வழியின்றி கீழே மாட்டிக் கொண்டான் இராவணன். ஆனால் சிவபக்தர்களுக்குத் தெரியும் சிவனை எப்படி வழிக்குக் கொண்டு வருவது என்று. தன் தொடை நரம்பினால் வீணை போன்ற ஏற்பாடு செய்து, சாம வேதப் பாடல்களைப் பாட, மனம் இரங்கினார் சிவ பெருமான், இராவணனைச் செல்ல அனுமதித்தார். மற்ற தெய்வங்களுக்கு சொல்லப்படாத சிறப்பு இதுவே. சிவபெருமானுக்கும் அவர்தம் அடியார்களுக்கும் மிகச் சிறந்த உறவு உண்டு. ஒருத்தரையொருத்தர் மதிக்கும் பண்பு வந்துவிட்டால் ஏது இங்கே பிரச்சினைகள்?

### இராவணன் நீர்வீழ்ச்சி

இராவணன் நீர்வீழ்ச்சி ஊவா மாகாணத்தில் கிரிந்தி ஆற்றில் அமைந்துள்ள ஒரு நீர்வீழ்ச்சியாகும். இது எல்லை - வெள்ளவாயா பெருந்தெருவிற்கு அருகே அமைந்துள்ளது.



பாதையில் இருந்தபடியே இதனை பார்வையிடமுடியும். இதன் நீர் ஊற்று வெவதன்னை மேட்டுநிலக்காடாகும். நீர்வீழ்ச்சி மூன்று படிநிலைகளில் பாய்கிறது. முக்கிய பாய்ச்சல் 9 மீட்டர் (30 அடி) மட்டுமேயாகும். நீர்வீழ்ச்சி சுண்ணாம்புக்கல் பறையில் அமைந்துள்ளது எனவே பாறை அறிப்பு துரிதமாக நடைபெறுகின்றது. மானசரோவர் ஏரி கைலை மலையில் உள்ள நன்னீர் ஏரி, இது உலகத்திலேயே மிக உயரத்தில் உள்ள நன்னீர் ஏரி என்று கருதப்படுகின்றது. இதன் அருகே ராட்சதலம் ஏரியும் உள்ளது. இந்த ராட்சதலம் ஏரியில் இருந்து இராவணன் தவம் புரிந்ததாக ஒரு கதை உள்ளது. மானசரோவர் ஏரி கைலை மலையில் உள்ள நன்னீர் ஏரி, இது உலகத்திலேயே மிக உயரத்தில் உள்ள நன்னீர் ஏரி என்று கருதப்படுகின்றது. இதன் அருகே ராட்சதலம் ஏரியும் உள்ளது. இந்த ராட்சதலம் ஏரியில் இருந்து இராவணன் தவம் புரிந்ததாக ஒரு கதை உள்ளது. இராவணன் நீர் வீழ்ச்சி இராமாயணத்தோடு தொடர்பு-டையதாக நம்பப்படுகிறது. நீர்-வீழ்ச்சிக்கு பின்னால் அமைந்துள்ள குகையில் சீதையை இராவணன் மறைத்து வைத்திருத்தார் என்பது தொன்மையான நம்பிக்கையாகும்.

*(இன்னும் நடுவோம்)*

செந்தூரன்

**சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்**

**குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி எண்**

**1929**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரசின்
# உலக வலம்

## சிரியாவிற்கு வான் பாதுகாப்புப் பொறிமுறை

சிரிய அரசிற்கு வான் பாதுகாப்பு பொறிமுறை அமைப்பை வழங்க இரஷ்யா முன்வந்துள்ளது. கடந்த இரு வருடங்களாக உள்நாட்டுப் போரில் சிக்கியுள்ள சிரியாவிற்கு மேற்குலகும், இரஷ்யாவும் எதிரெதிர் அணியினருக்குத் தமது ஆயுதங்களை விற்று வருகின்றனர். தற்போது இரஷ்யா நீண்டதூர வான் பாதுகாப்பு ஏவுகணைப் பொறிமுறையை சிரியாவிற்கு விற்கும் முடிவை எடுத்துள்ளது. இம்முடிவிற்கு இஸ்ரேலும் பிரான்சும் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.



## குவான்டனாமோ சிறைச்சாலைக்கு மேலும் 250 மில்லியன் டொலர்

அமெரிக்க பாதுகாப்புச் செயலகமான பெண்டகன் சர்ச்சைக்குரிய குவான்டனாமோ சிறைச்சாலையின் இவ்வருட செலவுக்களுக்காக மேலும் 250 மில்லியன் டொலர்களைக் கோரியுள்ளது. இச்சிறைச்சாலையை மூடும் விருப்புடன் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அண்மையில் கூட அமெரிக்காவைப் பாதுகாக்க குவான்டனாமோ தேவையில்லை என



அவர் கருத்துத் தெரிவித்திருந்தார்


## மரபணு மாற்றப்பட்ட உணவு வகைகளுக்கு எதிராகப் போர்

அமெரிக்காவின் 250 நகரங்களிலும், இன்னோரன்ன நாடுகளிலும், மரபணு மாற்றப்பட்ட உணவு வகைகளுக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. மரபணு மாற்றப்பட்ட உணவுப் பொருட்களின் விதைகள் சுயமான களை மற்றும் பூச்சிகொல்லிகளை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் அதிகூடிய விளைச்சலை அவை தரவல்லவை. ஆனால் அவ்வகை விதைகளால் உருவாக்கப்படும் உணவுவகைகள் சுற்றாடல் பாதிப்புடன் நோய்களையும் மனிதருக்கு உருவாக்கிவிடும் என மக்கள் அஞ்சுகின்றனர். ஆனாலும் அமெரிக்க, அரசும் விஞ்ஞானிகளும் இப்புத்து-யிராக்கபட்ட மரபணு உணவு வகைகள் பயன்பாட்டிற்கு உகந்தவை என்றே கூறிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## அமெரிக்க தகவல்களை மீண்டும் களவாடிய சீனா

சுமார் 25ற்கும் மேற்பட்ட அமெரிக்க இராணுவ யுத்த தளவாடங்களின் வடிவங்களை சீன கணனிக் கள்வர்கள் களவாடியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இவ் யுத்த தளவாட வடிவங்களுள் உலங்குவானூர்திகள், தாக்குதல் கப்பல்கள் மற்றும் வான் பாதுகாப்பு ஏவுகணை வடிவங்களும் உள்ளடங்கியுள்ளதாக அச் செய்தி மேலும் கோடிட்டுள்ளது. அமெரிக்க பாதுகாப்பு விஞ்ஞான குழுவின் அறிக்கையானது முழு அளவிலான சைபர் தாக்குதல் நிகழுமாயின் அமெரிக்கா அதனைத் தடுக்கக் கூடிய வலுவற்றிருப்பதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## 1976ல் தயாரான ஆப்பிள் கணினி ரூ. 3.5 கோடிக்கு ஏலத்தில் சாதனை

ஆப்பிள் நிறுவனம் தயாரித்த ஆரம்பகால கணனி ஒன்று 3.5 கோடி ரூபாய்க்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ளது.


கடந்த 1976ம் ஆண்டு ஆப்பிள் நிறுவனம் முதன்முதலாக தயாரித்த 200 கணனிகளில் இதுவும் ஒன்று என்பதுதான் இந்த அதிக விலைக்கு காரணம்.

எனினும், இந்த 200 கணனிகளில் வேலை செய்யும் நிலையில் உள்ளவை 6 மட்டுமே. அதில் ஒன்றுதான் மூன்றரை கோடி 'ரூபாய்க்கு விலை போயுள்ளது.

ஜேர்மனியைச் சேர்ந்த ப்ரெகர் (Breker) என்ற நிறுவனம் நடத்திய ஏலத்தில் ஆசிய கண்டத்தை சேர்ந்த அடையாளத்தை வெளிப்படுத்திக் கொள்ள விரும்பாத ஒருவர் இந்த கணனியை விலைக்கு வாங்கியுள்ளார்.

ஆப்பிள் கணனி நிறுவனத்தை ஸ்டீவ் ஜாப்சுடன் இணைந்து தொடங்கிய வாஸ்னியாக் (Wozniak) இதில் கையெழுத்திட்டுள்ளார் என்பது இதன் கூடுதல் சிறப்பு.

இது போன்ற பழமையான ஒரு ஆப்பிள் கணினி கடந்தாண்டு 3.5 கோடி ரூபாய்க்கு விலை போனது குறிப்பிடத்தக்கது.




# ஐந்தாம் ஆண்டுப்புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 17

பிரதீபா

1. இலங்கையின் தேசிய இலட்சினையை வரைந்த ஓவியர் யார்?
   1. எஸ்.டி. செனவிரெத்ன  2. ஜானக பெரேரா
   3. ரிச்சட் பத்திரன
2. தாவரத் தண்டின் அடியிலுள்ள வேரில் பூத்துக் காய்க்கும் தாவரம் எது?
   1. விளிம்பி  2. ஜம்புமரம்  3. பலா
3. சூரியகாந்திப் பூக்களை ஒத்த வடிவமுள்ள பூக்கள் கொண்ட தாவரம் எது?
   1. அன்னமுன்னா  2. முக்குத்தி பூண்டு  3. எள்ளு
4. சமையலுக்கு பயன்படும் எண்ணெய் வகையொன்றை பெறும் தாவரம் எது?
   1. சூரியகாந்தி  2. கித்துள்  3. கற்றாளை
5. விற்றமின் - B, இரும்புச்சத்து என்பவற்றை உட்கொள்ளாதவர்களுக்கு ஏற்படும் நோய் எது?
   1. மாலைக்கண்  2. அனீமியா  3. ஸ்கேவி
6. பாரம்பரிய புத்தாண்டு விழாக்களின் போது பெண்களால் இசைக்கப்படும் வாத்தியம் எது?
   1. றபானம்  2. தாளம்  3. மேளம்
7. கறிவகைகள் சமைக்கும் போது, கறிவேப்பிலையை எந்த வேளை சேர்க்க வேண்டும்?
   1. அடுப்பில் வைப்பதற்கு முன்  2. அடுப்பில் கறி இருக்கும் போது
   3. அடுப்பிலிருந்து இறக்கியவுடன்
8. எதிர்கால தேவைக்காக உணவைத் தேடி களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் பிராணிகளைக் கொண்ட கூட்டம் எது?
   1. எறும்பு, குளவி, தேனீ  2. தேன்குருவி, எறும்பு, தேனீ
   3. கறையான், எறும்பு, தேனீ
9. சேனநாயக்க சமுத்திரத்தின் அருகே அமைந்துள்ள நகரம் எது?
   1. அம்பாறை  2. அனுராதபுரம்  3. கண்டி
10. மீன் சந்தையொன்றில் மீனை வாங்கும் போது கவனிக்க வேண்டிய பிரதான விடயம் யாது?
    1. மீனுக்கு ஐஸ் போட்டது  2. மீனின் விலை
    3. மீன் பழுதடைந்துள்ளதா என சோதித்தல்
11. இலங்கையின் தேசிய அடையாளம் அல்லாதது எது?
    1. நாவல் மரம்  2. கரப்பந்தாட்டம்  3. நீல அல்லி
12. பூரான், தேள் போன்ற விஷப்பிராணிகள் கடிக்கும் போது, வழங்க வேண்டிய முதலுதவி எது?
    1. கடித்த இடத்தில் பழப்புளி பூசுதல்
    2. கடித்த இடத்தில் மண்ணெண்ணெய் பூசுதல்
    3. தேங்காய்ப்பாலை குடிக்கக் கொடுத்தல்.
13. பின்வரும் குறியீடு குறிப்பது எது?
    1. வளைந்து செல்லும் வீதி
    2. மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடியது
    3. மின் தாக்குதல் ஏற்படக்கூடிய இடம்



**பின்வரும் பாடலை வாசித்து 14, 15,வினாக்களுக்கு விடையளிக்குக.**

தைக்கும் நல்ல ஊசி  பதமாய் உள்ள ஊசி
தரம் வாய்ந்த ஊசி  சின்னஞ்சிறிய ஊசி
பளபளக்கும் ஊசி  சீராய்த் தைக்கும் ஊசி

14. இப்பாடலில் காணப்படும் இரட்டைக்கிளவித் தொடர் யாது?
    1. பளபள  2. தைக்கும் நல்ல  3. சின்னஞ்சிறிய
15. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அடுக்கிடுக்கித் தொடர் யாது?
    1. பளபள  2. தைக்கும் நல்ல  3. சின்னஞ்சிறிய
16. ஔடத பானம் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பழத்தைக் கொண்ட தாவரம் எது?
    1. முருங்கை  2. வில்வம்  3. முதிரை
17. ஒருவரின் மாதாந்த வருமானம் ரூபா 36000 ஆகும். இதில் 1/3 பங்கினை உணவுக்கும், 2/6 பங்கை மருத்துவச் செலவுக்கும் செலவிட்டார். மீதியை போக்குவரத்துக்காக செலவிட்டார். இவர் போக்குவரத்துக்காக செலவிட்ட பணம் எவ்வளவு?
    1. ரூபா 12,000  2. ரூபா 24,000  3. ரூபா 6,000
18. 4மீற்றர் நீளமும், 3 மீற்றர் அகலமும் கொண்ட சுவருக்கு 2லீற்றர் தீந்தை தேவை. 6 மீற்றர் நீளமும், 6மீற்றர் அகலமும் கொண்ட சுவருக்கு பூசுவதற்கு எவ்வளவு தீந்தை தேவை?
    1. 4 லீற்றர்  2. 12லீற்றர்  3. 6 லீற்றர்
19. 5 மீற்றர் நீளமுள்ள ஒரு நாடாவிலிருந்து ஒவ்வொன்றும் 43 செ.மீ நீளமுள்ள 5 துண்டுகள் வெட்டப்பட்டன. நாடாவின் எஞ்சியுள்ள பகுதியின் நீளம் யாது?
    1. 215செ.மீ  2. 2மீ 85செ.மீ  3. 7செ.மீ
20. அனுலா தனது எட்டாவது பிறந்த நாளை 29.02.2004 இல் வெகு விமர்சையாகக் கொண்டாடினாள் எனில், அவள் அடுத்த பிறந்த நாளை எந்த ஆண்டில் கொண்டாடுவாள்?
    1. 2005  2. 2006  3. 2008

பெயர்: ........................................................................
........................................................................
முகவரி: ........................................................................
........................................................................
........................................................................
பாடசாலை: ........................................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க கோணர் விவகாரத்தில் ஏன் இந்த முறுகல்

கே.சஞ்சயன்

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் மேலும் நெருடல்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன.

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானங்கள் மற்றும் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தி வருவது போன்ற காரணங்களால், அமெரிக்கா மீது இலங்கைக்கு நல்ல அபிப்பிராயம் இல்லை என்பது தெளிவு.

வெளிப்படையாக இலங்கை அரசாங்கம் அமெரிக்காவை எதிர்த்து நிற்காமல் போனாலும், அவ்வப்போது மறைமுகமாக அமெரிக்காவைச் சாடுவதை அரசாங்கம் வழக்கமாகவே கொண்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவில் இருந்து அமைச்சர்கள், அதிகாரிகள் வரை இதற்கு விதிவிலக்கான நிலையில் இல்லை.

போருக்குப் பின்னர், இந்த விடயங்களில் அமெரிக்கா கடைப்பிடித்து வரும் இறுக்கமான நிலை இலங்கை அரசாங்கத்தை பல்வேறு சந்தர்ப்பங்களில் நெருக்கடிகளுக்குள் தள்ளிவிட்டுள்ளது.

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் போன்ற விடயங்களில் இலங்கை அரசாங்கத்தின் மீது அமெரிக்கா அழுத்தம் கொடுப்பதால் தான், ஏனைய பல நாடுகளும் இலங்கைக்கு நெருக்கடி கொடுத்து வருகின்றன. இதற்கு உதாரணம், ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில், அமெரிக்கா எடுத்த முன் முயற்சியினால் தான், இரண்டு தடவைகளும் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் பெரும்பான்மை நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டன.

இதுவே வேறோரு நாடு எடுத்த முயற்சியாக இருந்திருந்தால், 2009இல் ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் சிறப்புக் கூட்டத்தில் சுவீடன் கொண்டு வந்த கண்டனத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது போன்ற நிலையே ஏற்பட்டிருக்கலாம்.

ஏனென்றால், கொமன்வெல்த் மாநாட்டை இலங்கையில் நடத்தக் கூடாது என்ற கருத்து கனடா போன்ற நாடுகளால் முன்னெடுக்கப்பட்ட போதும், லண்டனில் கடந்த மாதம் நடந்த கொமன்வெல்த் வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டத்தில் அதற்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை.

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவைத் தீர்மானத்தின்போது, சந்தர்ப்ப சூழ்நிலைகளால், அமெரிக்காவின் பின்னால் நின்ற இந்தியாவே, கொமன்வெல்த்தில் இலங்கையை நெருக்கடியில் இருந்து காப்பாற்றியது.

இதே கொமன்வெல்த் அமைப்பில் அமெரிக்கா இருந்திருந்தால், நிலைமை வேறாகியிருந்திருக்கக் கூடும். எனவே தான், இலங்கை அரசாங்கத்துக்கு அமெரிக்காவின் மீது அவ்வளவு கோபம் இருக்கிறது.

அதேவேளை, தனது சொற்படி நடந்து கொள்ளாமல், சீனாவின் பக்கம் சாய்ந்து செல்வது குறித்து இலங்கை மீது அமெரிக்காவுக்கும் கோபம் உள்ளது.

இரு நாடுகளுமே இராஜதந்திர உறவுகளையும், தூதரக உறவுகளையும் வைத்துக் கொண்டிருந்தாலும், சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுடன் இலங்கை கொண்டுள்ளது போன்ற நெருக்கமான உறவுகள் அமெரிக்காவுடன் கிடையாது.

அதிலும் தற்போதைய அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிசன் கொழும்பில் கடமையைப் பொறுப்பேற்பதற்கு முன்னதாகவே அரசாங்கத்துக்கும் அவருக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் தோன்ற ஆரம்பித்து விட்டன. கொழும்புக்கான தூதுவராக பரிந்துரைக்கப்பட்ட பின்னர், செனெட் சபையின் வெளிவிவகாரக் குழு முன்பாக மிச்சேல் ஜே சிசன் உரையாற்றிய போது, இலங்கையின் மனிதஉரிமைகள் நிலை குறித்து கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தார்.

அது அப்போது அரசாங்கத்துக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியிருந்தது. அவருக்கு கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்றும், அவரது நியமனத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றும் அமைச்சர்கள் பலரும் வலியுறுத்தியிருந்தனர்.எனினும், அமெரிக்காவின் விரோதத்தை சம்பாதிக்க நேரிடும் என்பதால், அரசாங்கம் அப்போது எந்த எதிர்ப்பையும் காட்டாமல் இருந்து கொண்டது.

மிச்சேல் ஜே சிசன் உலகின் பல்வேறு கொந்தளிப்பு பிரதேசங்களில் பணியாற்றிய மூத்த இராஜதந்திரி. அவரது வருகை இலங்கைக்கு நெருக்கடியாக அமையலாம் என்று அரசாங்கம் எற்கனவே எதிர்பார்த்திருந்தது. ஆனால், கொழும்பில் கடமைகளைப் பொறுப்பேற்ற சிறிது காலம் வரை அமெரிக்கத் தூதுவர் பெரிதாக எந்த நகர்வையும் மேற்கொள்ளவில்லை. அது அரசாங்கத்துக்கு ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தவே செய்தது.

இலங்கையின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை ஆராய்ந்த பின்னர், அமெரிக்கத் தூதுவர் வெளியிடும் கருத்துகள் அரசாங்கத்துக்கு எரிச்சலை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது அவர் உயர் பாதுகாப்பு வலயம், படைகளை நிறுத்துவது, முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாகத் தெரிவித்த கருத்துகள் ஏற்கனவே கண்டனங்களை ஏற்படுத்தியிருந்தன.

உள்நாட்டு விவகாரங்கள் குறித்து கருத்துகளை வெளியிடவோ, அதில் தலையிடவோ வெளிநாட்டு இராஜதந்திரியான அவருக்கு எந்த உரிமையும் கிடையாது என்று அமைச்சர்கள் பலர் கண்டனம் தெரிவித்திருந்தனர். இந்தநிலையில், தற்போது, அமெரிக்கத் தூதரகமும், திருகோணமலை நகரசபையும் செய்து கொண்டுள்ள உடன்பாடு அரசாங்கத்தை விசனத்தில் ஆழ்த்தியுள்ளது. திருகோணமலையில் அமெரிக்கன் கோணர் எனப்படும் தகவல் நிலையத்தை அமைப்பதற்கான உடன்பாடே அது.

இதுபோன்று ஏற்கனவே கண்டியிலும், யாழ்ப்பாணத்திலும் அமெரிக்கன் கோணர் இயங்கி வருகின்றது. இந்த உடன்பாடு குறித்து, வெளிவிவகார அமைச்சுக்குத் தெரியப்படுத்தவோ, முன் அனுமதி பெறப்படவோ இல்லை என்பது அரசாங்கத்தின் குற்றச்சாட்டு.

பொதுவாக உள்ளூரில் எந்தவொரு செயற்றிட்டங்களை முன்னெடுப்பதானாலும், வெளிநாட்டுத் தூதரகங்கள் அதுபற்றி வெளிவிவகார அமைச்சுக்குத் தெரியப்படுத்தி அனுமதி பெற்றுக் கொள்வது தான் நடைமுறை. இந்த நடைமுறை இலங்கையில் மட்டும் பின்பற்றப்படும் ஒன்று அல்ல. ஏனைய நாடுகளிலும் அதே வழக்கம் தான் உள்ளது.

ஆனால் அமெரிக்கத் தூதரகம் அவ்வாறு அனுமதி பெற்றுக் கொள்ளாதது ஏன் என்பது மர்மமாக உள்ளது. இலங்கையில் எத்தனையோ திட்டங்களை முன்னெடுக்கும் அமெரிக்காவுக்கு இந்த நடைமுறை தெரியாமல் போயிருக்க வாய்ப்பில்லை.

கிழக்கு மாகாணசபையின் ஊடாக, இந்தத் திட்டத்தை முன்னெடுக்காமல், திருகோணமலை நகரசபையின் ஊடாக இதனை முன்னெடுக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளதும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமே. கிழக்கு மாகாணசபை அரசின் கட்டுப்பாட்டின் கீழேயே இருப்பதால், அதனுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்த அமெரிக்கா விரும்பாமல் போயிருக்கலாம். ஆனால் அமெரிக்கா புரிந்துணர்வு உடன்பாடு செய்துள்ள கொண்டுள்ள திருகோணமலை நகரசபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அரசாங்கம் விசனம் கொண்டுள்ளதற்கு இதுவும் ஒரு காரணம்.

சிலவேளைகளில் ஆளும் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள இன்னொரு பிரதேசசபையுடன் அமெரிக்கா இந்த உடன்பாட்டைச் செய்திருந்தால், அதை அரசாங்கம் கண்டும் காணாமல் விட்டிருக்கலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வசம் உள்ள ஓர் உள்ளூராட்சி சபையுடன் அமெரிக்கா புரிந்துணர்வு உடன்பாட்டை செய்துள்ளதை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இலங்கை அரசாங்கத்துக்கு வெறுப்பேற்றும் வகையில், அமெரிக்கா திட்டமிட்டே இதனைச் செய்திருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது. ஆனால் அது உறுதிப்படுத்தப்பட்டது அல்ல.

இலங்கை அரசாங்கத்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் உதவித் திட்டங்கள் தொடர்பான முரண்பாடுகள் அண்மையில் தலைதூக்கியுள்ளன. வடக்கில் சில திட்டங்களை நடைமுறைப்படுத்த முயன்றபோது இராணுவத்தினர் தலையிட்டதால் அவற்றைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டதாக சில வாரங்களுக்கு முன்னர் அமெரிக்கத் தூதுவர் குற்றம் சாட்டியிருந்தார். அதன் பின்னர், இலங்கைக்கான நிதியுதவியை 20 சதவீதத்தினால் குறைக்க இராஜாங்கச செயலர் ஜோன் கெரி நடவடிக்கை எடுத்திருந்தார்.

அதனையடுத்து, நீதித்துறை மறுசீரமைப்புக்காக அமெரிக்கா வழங்க முன்வந்த 450 மில்லியன் ரூபா நிதியை அமெரிக்கா மீளப்பெற்றது. பிரதம நீதியரசர் விவகாரத்தில் எழுந்த சர்ச்சையால் தான் இந்த நிதி திரும்பப் பெறப்பட்டதாக கூறப்படுகிறது.

இத்தகைய பின்னணியில் தான், அமெரிக்கன் கோணரை அமைக்கும் உடன்பாட்டை திருகோணமலை நகரசபையுடன் செய்து கொண்டுள்ளது. இந்த விடயத்தில் அமெரிக்கா இராஜதந்திர நெறிமுறைகளை மீறியுள்ளதாக குற்றம்சாட்டப்பட்டாலும், அதை அமெரிக்கத் தூதரகம் நிராகரித்துள்ளது.

ஏற்கனவே கண்டியிலும், யாழ்ப்பாணத்திலும், அமெரிக்கன் கோணரை அமைக்கும் போது பின்பற்றப்பட்ட வழிமுறையே இங்கும் பின்பற்றப்பட்டதாக அமெரிக்கத் தூதரகத்தின் சார்பில் உடன்பாட்டில் கையெழுத்திட்ட அதிகாரி தெரிவித்துள்ளார். ஆனால் அரசாங்கம் இதனை இப்படியே விடுவதாகத் தெரியவில்லை.

அமெரிக்க அதிகாரிகளிடம் விளக்கம் கேட்கும் முடிவில் அரசாங்கம் இருப்பதாகத் தெரிகிறது. இதனை அமெரிக்க அதிகாரிகள் முன்கூட்டிய எதிர்பார்த்திருக்கவும் வாய்ப்புகள் இல்லாமல் இல்லை. ஆனாலும் அமெரிக்கா இதனை ஓர் உள்நோக்கத்துடன் தான் செய்துள்ளது போலத் தோன்றுகிறது. ஏனெனில், அரசாங்கத்தின் போக்கு அதற்கு பிடிக்கவில்லை என்பது தெரிகிறது.

அதைவிட, ஈரானிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்யும் விவகாரத்திலும் இலங்கை மீது அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த விவகாரம் அமைச்சரவைக் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டுள்ளது. அதனால் தான், 2012ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குப் பின்னர், ஈரானிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்யப்படவேயில்லை என்று அரசாங்கம் அறிவிக்க வேண்டியேற்பட்டது. இப்போது பல்வேறு தளங்களிலும் அமெரிக்க - இலங்கை உறவு நிலை தளர்ச்சியடைய ஆரம்பித்துள்ளது.

இந்த நிலைக்கு இலங்கை அரசாங்கத்தின் போக்கும் ஒரு காரணம். ஐ.நா மனிதஉரிமைகள் பேரவைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இரண்டு மாதங்கள் முடிந்துள்ள நிலையில், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான எந்த அறிகுறிகளும் அரசாங்கத்திடம் இருந்து வரவில்லை.

தன்னால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் அலட்சியப்படுத்துவதாக அமெரிக்கா உணரத் தொடங்கியுள்ள நிலையில் தான், தற்போதைய முறுகல்கள் தோன்றத் தொடங்கியுள்ளன. இந்த முறுகல் ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் அடுத்தடுத்து கூட்டத்தொடர்கள் நெருங்கும் போது இன்னும் அதிகமாகலாம்.

விநதலை முகம் புத்தகத்திலிருந்து

## மீறல்

வாழ்வின் மீதான மதிப்பீட்டை
படிக்கல்லாக்கி தராசில்
இட்டேன்.
நிலுவையை மீறி
வழுவிச் செல்லுது வாழ்வு
கைப்பிடிக்குளகப் படாத
சிட்டுக் குருவி நீச்சலுடன்

## அது

இருப்பின் கைவிரிப்புள் இன்மை
இன்மையில் அரும்பவிழும் இருப்பு
இருப்பினுள் இருப்புமாய்
இன்மையுள் இருப்புமாய்
இயல்கின்றது எதுவும் அற்றது:
ஆயினும் எனக்குளினிக்கும்
கணுமுற்றி நின்ற கரும்பாயிற்று.



## விமுக்தன்

தகர்க்கப்பட்ட புத்தர் சிலையின்
விமுக்தி முத்திரை விரல்கள்
தெறித்து வந்து என்னில்
தியானச் சிற்றுளி தரித்தன.

ஞாபகம் வந்ததென் கனவில்
புத்தர் எனது
ஜாதகத்தை விரித்துப்
பார்த்திருந்தது.
ஜாதகக் கதையில் வரும்
அங்குலி மாலாவின் நினைவும்
வந்து போயிற்று.

விரல்களில் சின்முத்திரையிட்டு
தியானத் தமர்ந்திருந்தேன்
சிற்றுளி செதுக்க செதுக்க
என்னுரு தகர்ந்தது.
நானே புத்தராய்ச் சமைந்தேன்.

## இறைச்சிப் பொருள்

இன்றெனது கனவில்
மனித இறைச்சியை
நானுண்டேன்

தலை வாழை இலையில்
இளஞ்சிவப்பு நிறத்தில்
படைக்கப்பட்டிருந்தது
எனது இறைச்சி
பதமாய்ச் சமைத்த பாகத்தில்
என்னை நானே உண்டேன்.
இறைச்சிப் பொருளாக
அருவெறுப்பு நீங்கித் தெளிந்தபின்
வெளியில் வந்தால்
இருள் கரைந்துருக முழுநிலா

சு. வில்வரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பூரின் ஊடாக..

போட்டித்தன்மை வாய்ந்த கேள்வி நடவடிக்கைகள் பின்பற்றப்படவில்லை என அவ்வமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இக்குற்றச்சாட்டுத் தொடர்பாக இலங்கையின் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்குப் பேட்டியளித்த வலு,சக்தி அமைச்சின் செயலர் " நுரைச்சோலை அனல் மின் நிலையப் பணிகளில் கேள்வி கோரல் நடவடிக்கை பின்பற்றப்படவில்லை. இத் திட்டத்தை சீனாவிற்கு வழங்கினோம். அதனால்தான் இந்தியா சம்பூர் மின்உற்பத்தி நிலையத்தின் மீது தனது கரிசனையைக் கொண்டிருந்தது. ஆனாலும் இலங்கை இந்தியாவுடன் இம் மின்நிலையம் சார்பாக ஒப்பந்தத்தில் ஈடுபட்டதற்கான காரணம் இலங்கையில் அதிகரித்து வரும் மின்தேவையை நிவர்த்திசெய்ய வேண்டும் என்பதாலேயே'' என்று தெரிவித்துள்ளார்.

நுரைச்சோலை அனல்மின் நிலையப் பணிகளில் ஏன் கேள்விகோரல் நடைமுறை பின்பற்றப்படவில்லை எனக் கேட்டபோது " கேள்வி கோரலின் ஊடாக நல்லதொரு வழங்குனரைத் தெரிவு செய்திருக்கக்கூடிய வாய்ப்பிருந்தது. ஆனால் இத்திட்டம் ஒரு கூட்டு முயற்சியாக இருந்ததால் இலங்கை அரசும் நிதியிட வேண்டிய தேவை அப்போது காணப்பட்டது. அதற்குத் தேவையான நிதியினை வழங்க முன்வந்த சீன அரசு அதற்காக முன்வைத்த நிபந்தனை யாதெனில் நுரைச்சோலை மின் நிலையப் பணிகள் சீன நிறுவனமான சீ.எம் .சீ.ஆர். கம்பனிக்கே வழங்கப்பட வேண்டும் என்பதாகும். அந் நிபந்தனைக்கு அமையவே நுரைச்சோலை தாபிக்கப்பட்டது" என செயலர் மேலும் தெரிவித்துள்ளார்.

"சீனாவிற்கு நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை வழங்கியதால் இந்தியாவுடன் எழுந்த முரண்பாடுகளைக் களையவே சம்பூர் மின் நிலையப் பணியினை இந்தியாவிற்கு இலங்கை அரசு வழங்கியுள்ளது" எனக் குற்றஞ்சாட்டியுள்ள இலஞ்சத்திற்கு எதிரான அமைப்பு இவ்விரு அபிவிருத்திப் பணிகளிலும் உட்கிடையான அரசியல் நோக்கங்களே இருப்பதாக மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருமலைக் கொலைகளின் பின்..

நியமித்த சர்வதேச சுதந்திர முக்கியஸ்தர்கள் குழுவின் அழுத்தம் காரணமாகவே இந்த சாட்சிகளை பாதுகாக்கும் சட்டமூலம் கொண்டுவரப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால், இலங்கை அரசாங்கத்தின் பாராமுகம் மற்றும் அசமந்த போக்கினால் விசனமடைந்த இந்த குழு நாட்டைவிட்டே வெளியேறிவிட்டது. அந்த ஆணைக்குழுவிற்கும் அதன் செயற்பாடுகளுக்கும் என்ன? நடந்தது என்றும் அவர் கேள்வெழுப்பினார்.

### சட்டவிரோத மின்சாரம்..

அயல் வீடு ஒன்றிற்கு சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற பாதுகாப்பற்ற மின்வடம் அவ்வேலியின் மீது படர்ந்து கிடந்ததை அறியாத மாணவி அவ் வேலியை தனது கையால் பற்றியபோது மின் அதிர்ச்சிக்கு உள்ளாகி சம்பவ இடத்திலேயே உயிர் நீத்துள்ளார்.

காவல்துறை விசாரணைகள் இடம்பெறுகின்றன.

### மூதூரில் விழிப்புணர்வு..

கருத்தரங்கொன்றை பாரதிபுரம் பாடசாலையில் நடாத்தவுள்ளது.

அதேபோல எதிர்வரும் 08.06.2013ல் "மாணவர் உரிமையும் கல்வியும்'' என்னும் தலைப்பில் மாணவருக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்றையும் பாரதிபுரம் பாடசாலையில் நடாத்தவுள்ளதாக மூதூர் இந்துக் குருமார் சங்கத்தின் தலைவர் சிவஸ்ரீ இ. பாஸ்கரன் குருக்கள் அவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

இவ் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளில் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறும் குருமார் சங்கத் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கரையோரப் பாதுகாப்புப் பயிற்சியாளர் பயிற்சி நெறி நிறைவு

அமெரிக்க அரசின் உதவியுடன் திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் நடாத்தப்பட்ட கரையோரப் பாதுகாப்புப் பயிற்சியாளர் பயிற்சி நெறி கடந்த மாதம் நிறைவு பெற்றுள்ளது.

இப்பயிற்சி நெறியினை அமெரிக்கக் கடலோரப் பாதுகாப்புப் படைப்பிரிவின் மூன்று அதிகாரிகள் நடாத்தியுள்ளனர். இப் பயிற்சி நெறியில் இலங்கைக் கடலோரக் காவற் படையின் 20 அலுவலர்களும், நான்கு கடற்படையினருமாக மொத்தம் இருபத்தினான்கு படையினர் பயிற்சியாளர்களாகப் பரிணமித்துள்ளனர்.

இறுதி நாள் நிகழ்வுகளுக்கு அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிசன் அவர்களும் இலங்கைக் கடலோரக் காவற்படைப் பொறுப்பாளர் ரியர் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தனவும் கலந்து சிறப்பித்திருந்தனர். அங்கு கருத்தறிவித்த தூதுவர் இப் பயிற்சிநெறியானது இரண்டாவது தடவையாக இங்கு நடாத்தப்படுவதாகவும் நாடுகளின் கடற்காவல் திட்டத்தை மேலும் வலுவடையச் செய்யும் அமெரிக்க அரசின் சிந்தனைக்கமைவாகவே இப் பயிற்சி இலங்கைப் படையினருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் இரண்டு கடலோரக் காவற்படையினருக்கு அமெரிக்காவில் பயிற்சி அளிக்கப்படுவதாகவும் தெரிவித்த அவர் முறையே மே மற்றும் ஜுன் மாதங்களில் அவர்களிருவரும் பயிற்சியை முடித்து நாட்டுக்குத் திரும்பவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



### மனைவியின் சந்தேகத்தால்..

உள்நாட்டுத் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில் சாரதியாகப் பணியாற்றிவரும் இந் நபர் சம்பவ தினம் நஞ்சருந்திவிட்டு வீட்டைப் பூட்டிக்கொண்டு தன்னைத் தானே எரியூட்ட முயற்சித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால் படுகாயமடைந்த அவர் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மசகு எண்ணை இழுபறியில்..

அனுமதியின்றியே இப் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இவ்வகையான இரு நிலையங்கள் ஏற்கனவே கண்டியிலும் யாழப்பாணத்திலும் திறக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் நிலையங்களை இலங்கையில் திறப்பதற்கு ஏற்கனவே அனுமதி பெறப்பட்டிருப்பதாகவும் அமெரிக்கத் தரப்புத் தகவல்கள் தெரிவித்திருந்தன.

ஆனால் அரசின் இவ் எதிர்ப்பிற்கு அடிப்படையாக அமைந்தது அமெரிக்கா இலங்கையின் மீது அண்மையில் சுமத்தியிருந்த குற்றச்சாட்டா எனும் சந்தேகம் எழுந்துள்ளது.

அண்மையில் இலங்கை தற்போதும் ஈரானுடன் மசகெண்ணை தொடர்பான தொடர்புகளைக் கொண்டுள்ளது என்ற குற்றச்சாட்டை அமெரிக்கா சுமத்தியிருந்தது. மசகெண்ணை இறக்குமதி தொடர்பாக அமெரிக்க ஈரானின் மீது தடைகளை விதித்திருப்பதால் அச் சர்வதேசத் தடைகளை இலங்கை மீறிவருவதாகவே அக்குற்றச்சாட்டு அமைந்திருந்தது. உடனடியாகவே அதற்குப் பதிலளித்த பெற்றோலிய வளத்துறை அமைச்சர் 2012ம் ஆண்டின் நடுப்பகுதி வரையுமே தாம் மசகெண்ணை இறக்குமதியை ஈரானிலிருந்து மேற்கொண்டதாகவும் அதன் பின்னர் எவ்வித எண்ணை இறக்குமதியும் ஈரானில் இருந்து மெற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவித்திருந்தார்.

அதைத் தொடர்ந்தே அமெரிக்காவின் திருமலைத் தகவல் நிலைய உருவாக்கத்தை அரசு கையில் எடுத்துள்ளதாக அனுமானிக்கப்பட்டுள்ளது.

## தடம் மாறியது பேருந்து – தப்பிப்பிழைத்தனர் பயணிகள்

கிண்ணியாவையும் தம்பலகாமத்தையும் இணைக்கும் வழித்தடத்தின் ஊடாகப் பயணித்த போக்குவரத்துக் கம்பனிக்குரிய பேருந்து ஒன்று தெருவினை விட்டு தடம் புரண்டதில் பயணிகள் எவரும் காயமின்றித் தப்பியுள்ளனர்.

கிண்ணியாவிலிருந்து புறப்பட்ட இப் பேருந்து தம்பலகாமம் வீதியூடாக கந்தளாய் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த போதே இவ் அசம்பாவிதம் நிகழ்ந்துள்ளது. இவ்வீதி, மாரி காலங்களில் மழை வெள்ளத்தினாலும் கோடை காலத்தில் பள்ளம் படு குழியுமாகவும் காணப்படுவதால் போக்குவரத்துக்குப் பெரும் அசௌகரியங்கள் ஏற்படுவதாக மககள் தெரிவிக்கின்றனர்.



### அடிக்கல் நாட்டு விழா..

2008ம் ஆண்டு மந்திரிசபையினால் அங்கிகரிக்கப்பட்ட, கணனி ஆய்வு கூடம், ஆண், பெண் மாணவர் விடுதிகள் என்பவற்றிற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தில் 25.05.2013 அன்று மு.ப 10.30 மணியளவில் வளாக முதல்வர் வைத்திய கலாநிதி. நா. வர்ணகுலேந்திரன் அவர்களின் அழைப்பின் பெயரில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி. கி. கோபிந்தராஜா அவர்களின் முன்னிலையில் மாண்புமிகு உயர் கல்வி அமைச்சர் எஸ் பி. திசாநாயக்கா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

அத்துடன் சென்ற வருடம் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மாணவர்களுக்கான பொழுது போக்கு மையத்திற்குமான அடிக்கல் நாட்டப்பட்டது.



### சேருவிலையும்..

வீதியெனப் பெயரிடப்பட்டுள்ளது. இப் பெயர் முன்னால் பிரதம நீதியரசரான சரத் என் சில்வாவின் முழு நாமம் ஆகும்.

வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் தீர்ப்பளித்த முன்னால் நீதியரசரான அவரது பெயரை இரண்டு பிரதேசங்களை இணைக்கும் தெருவிற்குச் சூட்டப்பட்டுள்ளது என விடயவிளம்பி ஒருவர் மலைமுரசிற்கு தெரிவித்தார்.

## தீ நாக்குத் தீண்டிய பெண் உயிரிழந்தார்

குப்பி விளக்கு தவறுதலாக விழுந்து தீப்பற்றியதால் படுகாயமடைந்த 16 வயதான விஜிதா ஒரு மாதத்தின் பின் மரணமாகியுள்ளார்.

முதலிக்குளம் (மொரவெவ) பன்குளம் 1ம் கண்டத்தைச் சேர்ந்த இளம் மனைவியான இவரும் இவரது கணவன் விஜயகாந்த் (வயது 18) என்பவரும் தமது வீட்டில் படுந்திருந்த போது ஏப்ரல் மாதம் 22ம் திகதி இரவு 12 மணியளவில் நிகழந்த விபத்தால் விஜிதா படுகாயமடைந்து திருமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். இவ் விபத்தின் போது கணவனும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் எனினும் 20ம் திகதி இவர் வைத்தியசாலையை விட்டு வெளியேறியிருந்தார். ஆனால் இவரது மனைவி சிகிச்சை பலனளிக்காமல் மறுநாள் மரணமாகியுள்ளார்.

விஜிதா பராயமடையாதவர் என்பதால் இவர்கள் இருவரும் திருமணம் முடிக்காமல் சேர்ந்து வாழ்ந்துவந்துள்ளனர். விஜயகாந்த் மது அருந்துவது தொடர்பாக விஜிதா விஜயகாந்துடன் மனமுரண்பாட்டிற்கு உள்ளாகியிருந்த வேளை நிகழ்ந்த இவ விபத்து இருவரையும் நிரந்தரமாகப் பிரித்துவிட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அறிந்துகொள்ளுங்கள்

### புவி

காலவரிசை...

நிலா, செவ்வாய் கிரகத்தின் பரப்பை ஒத்த ஒரு விண் வெளி பொருள் (தீயா என்று சில சமயம் அழைக்கப்படும்), புவியின் பத்தின் ஒரு பங்கு திண்மத்தை கொண்டதுமாகிய அப்பொருள் புவியின் மீது கொண்ட தாக்கத்தால் உருவாகியிருக்கலாம் என நம்பப்படுகிறது. இவ்வேற்றுலக பொருளின் ஒரு பகுதி புவியுடன் கலந்திருக்கலாம் எனவும் மற்ற பகுதிகள் விண் வெளியில் சிதறியும், புவியின் காந்த விசையால் புவியை சுற்றும் பாதையை அடைந்து சந்திரனாகவும் மாறியிருக்கலாம் எனவும் எண்ணப்படுகிறது.

எரிமலை சீற்றம் மற்றும் வாயுக்களின் வெளிக்கொணர்வு ஆகியன ஆதிகால புவியின் வளிமண்டல்த்தை உருவாக்கின. விண் பெருகற்கள், வால் நட்சத்திரம், பெரிய முன்கிரகங்கள் மற்றும் நெப்ட்டியூனைத் தாண்டி உள்ள சூரிய மண்டலத்திலுள்ள விண் வெளிப் பொருட்களிலிருந்து பெறப்பட்ட பனிக்கட்டி, நீர் ஆகியனவும் வளிமண்டலத்திலிருந்து சுருங்கும் நீராவியினாலும், சமுத்திரங்கள் உருவாகின.

கண்டங்களின் படிப்படியான வளர்ச்சியை விவரிக்க இரு மாதிரிகள் விவரிக்கப்பட்டுள்ளன. இன்றுவரை நிலையான மாற்றத்தினால் அவை உண்டானது என்பதும் மற்றொன்று புவியின் ஆரம்ப காலத்திலேயே துரித மாற்றத்தினால் அவை ஏற்பட்டன என்பதுவாகும்.



தற்போதைய ஆய்வின்படி இரண்டாவது கூற்றே, அதாவது புவியின் ஆரம்பத்திலேயே துரித வளர்ச்சியுடன் கண்டங்களின் ஓடு உருவாகி விட்டதென்றும், பிறகு அவை நிரந்தர கண்டப் பரப்பாக உருவாகியதே ஏற்கக்கூடியதாக உள்ளது. பல நூறு மில்லியன் வருட கால அளவில் நோக்கும் போது, புவியின் மேற்பரப்பு கண்டங்கள் தொடர்ச்சியாக உருவாவதாலும் அழிவதாலும் மாறிக்கொண்டு வந்துள்ளது. இதனால் கண்டங்கள் புவியின் மேற்பரப்பில் நகர்ந்து எப்போதாவது ஒன்றோடு ஒன்று இணைந்து மகா கண்டங்கள் உருவாகின. தோராயமாக 750 மில்லியன் வருடங்களுக்கு முன் (மிமு), அப்போதறிந்த மகாகண்டம் ரோடினியா (Rodinia), உடைய ஆரம்பித்தது. அது பின்னர் இணைந்து பென்னோஷ்யா (Pannotia) என்ற கண்டமாக உருமாறி பின், 600 - 540 மிமுவின், பின் இறுதியில் பஞ்சியா (Pangaea) என்ற கண்டமாக உருவடைந்து, பின் 180 மிமுவில் மீண்டும் உடைந்து பிரிந்தது.

(தொடரும்.)


## தன்வினை தன்னைச் சுடும்

ஒரு கிராமத்தில் உப்பு வியாபாரி ஒருவன் இருந்தான். அவன் தினமும் தன் கழுதையின் மேல் உப்பு மூட்டையை ஏற்றிச் சென்று தனது கிராமத்திற்கு அருகிலுள்ள நகரத்திற்குச் சென்று விற்று வந்தான். அவர்கள் செல்லும் வழியில் ஓர் நீர் ஓடை இருந்தது. வழமை போல் கோடையில் ஒரு நாள் உப்பு மூட்டையுடன் சென்றுகொண்டிருந்தான். சென்று கொண்டிருந்த வேளையில் கழுதை கால் தவறி ஓடை நீரில் விழுந்து விட்டது. கழுதை விழுந்ததால் அதன் முதுகில் இருந்த மூட்டையும் நீரில் விழுந்தது. நீரில் விழுந்த உப்பு மூட்டையில் சிறிதளவு நீரில் கரைந்தது. தடுமாறி எழுந்து நின்ற கழுதை தன் முதுகில் இருந்த மூட்டையின் பாரம் குறைந்திருப்பதைக் கண்டு மிகவும் சந்தோசப்பட்டது. வியாபாரியும் தற்செயலாக ஏற்பட்ட விபத்திற்கு கழுதையை தண்டிக்காமல் தானும் வருந்தாமல் கழுதையுடன் வீடு திரும்பினான். மறுநாட் காலை வழக்கம் போல் உப்பு மூட்டையுடன் கழுதையை சந்தைக்கு ஓட்டிச் சென்றான். ஓடையைக் கடக்கும் பொழுது முதல் நாள் விழுந்தது போலவே கழுதை இன்றும் திடீரென்று கீழே விழுந்தது. அதனால் இன்றும் மூட்டை நீரில் விழுந்து கரைந்து போனது. நீரில் விழுந்த கழுதை எழும்பும் போது பாரம் மிகக் குறைந்து இலகுவாக இருந்ததால் கழுதை மிகவும் மகிழ்ச்சியடைந்தது. ஆனால் வியாபாரிக்கோ ஏமாற்றமாக இருந்தது. சற்று நேரத்தின் பின்னர் வியாபாரி, கழுதை மிகவும் உற்சாகமாக வருவதைப் பார்த்து சந்தேகங்கொண்டான். பின்னரே அவன் கழுதையின் சூழ்ச்சியைப் புரிந்து கொண்டான். வேண்டுமென்றே தன் பளுவைக் குறைக்கக் கழுதை நீரில் விழுவதை உணர்ந்தான். அதற்கு புத்திபுகட்ட விரும்பினான். மறுநாட் காலை உப்பு மூட்டைக்குப் பதிலாக கடற்பஞ்சு மூட்டை ஒன்றைக் கழுதையின் மேல் ஏற்றிச் சென்றான். வியாபாரியின் தந்திரம் அறியாத கழுதையும் பளு குறைவாக இருந்ததால் மகிழ்ச்சியுடன் நடந்து சென்றது. அன்றும் ஓடை நீரில் விழுந்தது. மூட்டையிலிருந்த கடற்பஞ்சு ஓடை நீரை உறிஞ்சி மேலும் பளுவாயிற்று. வெகு அதிக பளு காரணமாக கழுதையினால் சுலபமாக எழுந்திருக்க முடியவில்லை. சிரமத்துடன் எழுந்து நின்றது. வியாபாரியும் அதை திரும்ப வீட்டிற்கு ஓட்டிச் சென்றான். பளு தாங்க முடியாமல் கழுதை மிக வருத்தத்துடன் தடுமாறி நடந்து சென்றது. தனது அறியாமையால் தனக்கு ஏற்பட்ட துன்பத்தை நினைத்து வருந்தியது. வீடு சென்றதும் வியாபாரியும் களைத்துப் போய் நின்ற கழுதைக்கு உணவிட்டு இளைப்பாற விட்டான். அன்று முதல் தனது தீய எண்ணங்களை விட்டு தனது எஜமானுக்காக உண்மையாக உழைத்தது.

## அனைத்துலக ஆண்டுகள்

- 2004 - அடிமைத்தனத்துக்கு எதிரான போராட்டத்தையும் அதன் ஒழிப்பையும் நினைவுகூர்வதற்கான ஆண்டு.
- 2004 - அரிசி ஆண்டு.
- 2003 - கிர்கிசு நாட்டுநிலை ஆண்டு.
- 2003 - அனைத்துலக நன்நீர் ஆண்டு.
- 2002 - ஐக்கிய நாடுகள் பண்பாட்டு மரபு ஆண்டு.
- 2002 - மலைகள் ஆண்டு.
- 2002 - சூழலியல் சுற்றுலா ஆண்டு.
- 2001 - அனைத்துலக நாகரிகங்களுக்கிடையேயான உரையாடல் ஆண்டு.
- 2001 - தன்னார்வலர் ஆண்டு.
- 2001 - இனவாதம், இனப்பாகுபாடு, அந்நியர் வெறுப்பு, அனைத்துலக ஆண்டு. போன்ற பிற சகிப்புத்தன்மையின்மை என்பவற்றுக்கு எதிரான வளத்திரட்டல் ஆண்டு.

(தொடரும்.)




## செயற்கை கால்களுடன் எவரெஸ்டில் ஏறிய முதல் பெண்

செயற்கை கால்களுடன் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் பெண் என்ற சாதனை படைத்த அருணிமா சின்ஹாவுக்கு காத்மண்டுவில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த 21ம் திகதி எவரெஸ்ட் சிகரத்தில் 8 ஆயிரத்து 848 மீட்டர் உயரத்திற்கு ஏறி அருணிமா சின்ஹா சாதனை படைத்தார். இந்தியாவின் வாலிபால் அணிக்காக விளையாடியுள்ள, இவர் பல சாம்பியன் பட்டங்களை வென்றுள்ளார்.

கடந்த 2011ம் ஆண்டு உத்தரபிரதேசத்திலிருந்து டெல்லிக்கு ரயிலில் சென்ற போது கொள்ளையர்களால் தாக்கப்பட்டு தூக்கி வீசப்பட்டார்.

அதில், ரயிலில் சிக்கி அவரது இரண்டு கால்களும் சேதமடைந்தன.



உயிர்காக்கும் முயற்சியில் அவரது இரண்டு கால்களும் அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டன.

தொடர் சிகிச்சைகளுக்கு பின்னர் அருணிமா சின்ஹா உயிர் பிழைத்தார். எவரஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் இந்திய பெண்ணான சுப்ரா முகர்ஜியின் ஆலோசனை மற்றும் வழிக்காட்டுதலுடன் எவெரஸ்ட் சிகரத்தில் ஏறி அருணிமா சின்கா சாதனை படைத்துள்ளார்.

## தாய்ப் பாலில் தேநீர் தயாரிக்கும் பெண்

தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளினியும் பாடகியுமான மைலின் கிலாஸ் என்ற 35 வயது பெண்ணே இவ்வாறு செய்துள்ளார்.

"எனது தந்தை தாய்ப் பாலில் தேநீர் தயாரிக்கப்படுவதையே அதிகம் விரும்பவார். இதனால், இதனை நான் ஒரு குடும்ப பாரம்பரியமாக பின்பற்றி வருகின்றேன்'' என்று அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தாய்ப் பாலினூடாக தயாரித்த தேநீரை தனது நண்பர்கள் மற்றும் குடும்பத்திற்கு வழங்கியுள்ளதாக அவர் ஊடகமொன்றுக்கு தகவல் வழங்கியுள்ளார்.

"இது சாதாரண செயற்பாடு. இதனை எல்லோருக்கும் முயற்சித்து பார்க்க வேண்டும். ஏனைய பானங்களைவிட தாய்ப் பாலில் தயாரிக்கப்படும் தேநீரானது மிகவும் சுவையானது. நான் இதனை அறிந்துகொண்டே வளர்ந்தேன். அதனால், இது விநோதமானது அல்ல. நாங்கள் அன்பான குடும்பம் என்பதனை நீங்கள் தற்போது அறிந்திருப்பீர்கள்" என்று அப் பெண் மேலும் தெரிவித்துள்ளார்.




## கணவாய்க் கறி

தேவையான பொருட்கள்:

கணவாய் - 1கிலோ, தேங்காய் - 1, வெங்காயம் - 100 கிராம், பச்சைமிளகாய் - 4, உள்ளி - 8 பல், இஞ்சி - 1 துண்டு, வெந்தயம் - 1 தே.க, கறிவேப்பிலை - 2 நெட்டு, ரம்பை - ஒரு துண்டு, கறிமிளகாய்த்தூள் - 4 மே.க, தேங்காயெண்ணெய் - 4 மே.க, உப்பு - அளவிற்கு, தேசிப்புளி - அளவிற்கு, மசாலாத் தூள் - 1 தே.க, பெருஞ்சீரகம் - 1 தே.க, கடுகு - 2 சிட்டிகை, சிக்கின் சூப் - 1 கட்டி

செய்முறை: கணவாயின் கழுத்துப் பகுதியை இறுகப் பிடித்துக்கொண்டு உள்ளிருக்கும் பகுதிகளை இழுத்தெடுத்து பின் நன்றாக் கழுவி தேவையானவற்றை எடுத்துக் கொள்ளவும். பின்பு கணவாயின் குழாய் போன்றிருக்கும் பகுதியை பாவற்காய் வெட்டுவது போல் வட்ட வடிவமாக வெட்டிக்கொள்க. பின்பு உள்ளி, இஞ்சி என்பவற்றைத் துப்பரவாக்கிப் பசுந்தையாக அரைத்தெடுத்துக் கொள்ளவும். பின்னர் அரைத்த கூட்டு மிளகாய்த் தூள் என்பவற்றை வெட்டி வைத்துள்ள கணவாயிலிட்டு நன்றாகப் பிசைந்து சேர்த்து அரைமணி நேரம் வரை ஊறவைக்கவும். வெங்காயம், பச்சைமிளகாய் என்பவற்றைத் துப்பரவாக்கிக் கழுவிச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி வைத்துக் கொள்ளவும். தேங்காயைத் துருவித் தண்ணீரைச் சிறிதாக விட்டு 1 தம்ளர் முதல் பாலைப் பிழிந்தெடுத்துக் கொள்ளவும். பின்பு தாச்சியை அடுப்பில் வைத்து 3 மே.க எண்ணெயை விட்டுக் காய்ந்த பின்பு கடுகைப் போட்டு வெடிக்கவைத்து வெட்டிய வெங்காயம், பச்சைமிளகாய், கறிவேப்பிலை, ரம்பை என்பவற்றையிட்டு வதங்கவிட்டு முக்கால் பதமாக வதங்கிய பின்பு பெருஞ்சீரகம், வெந்தயம், கணவாய் என்பவற்றையிட்டு நன்கு கிளறிச் சேர்த்து மூடி வதங்க விடவும். கணவாய் அவிந்து வாசனை வரும்போது, சிக்கன் சூப் கட்டி, அளவிற்கு உப்பு என்பவற்றையிட்டு நன்றாகத் துளாவிச் சேர்த்துக் கொண்ட பின்பு மெல்லிய நெருப்பில் மூடி அவிய விடவும். கறி நன்றாகத் திரண்டு பிரட்டல் பதத்தையடையும் போது மசாலாத் தூள் சேர்த்து இறக்கித் தேசிப்புளி கலந்து



## உள்ளி ஊறுகாய்

தேவையான பொருட்கள்:

உள்ளி - கால் கி.கி, நல்லெண்ணெய் - 3 மே.க, பெருங்காயம் - 1 துண்டு, கடுகு - 1 தே.க, மிளகுத் தூள் - 1 தே.க, உப்புத் தூள் - 1 தே.க, சீரகத் தூள் - 1 தே.க, புளி - பாக்களவு, தண்ணீர் - அரை தம்ளர், வினாகிரி - 3 மே.க, தனி மிளகாய்த் தூள் - 1 தே.க, மஞ்சள் தூள் - 1 தே.க

செய்முறை: உள்ளியைத் தோல் நீக்கித் துப்பரவாக்கி வைத்துக் கொள்ளவும். பெருங்காயத்தைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி வைத்துக் கொள்ளவும். பின் தாச்சியை அடுப்பில் வைத்து சூடானதும் நல்லெண்ணெய் விட்டு கொதித்ததும் பெருங்காயத்தை இட்டு பொரியவிடவும். பெருங்காயம் பொரிந்து நிறம் மாறியவுடன் கடுகை இட்டு வெடிக்க வைக்கவும். கடுகு வெடிக்கத் தொடங்கியவுடன் உள்ளியையிட்டு பொன்னிறமடைந்ததும் மஞ்சள் தூள், மிளகுத் தூள், மிளகாய்த்தூள், சீரகத்தூள், உப்புத் தூள் என்பன இட்டு நன்கு கிளறிச் சேர்த்துக் கொள்ளவும். பின்பு அரை தம்ளர் தண்ணீரில் கரைத்து வடித்த புளிக்கரைசல், 3 மே.க வினாகிரி என்பன இட்டு நன்றாகச் சேர்த்துக் கொண்ட பின் நீர்த்தன்மை ஓரளவாக வற்றும் வரை கொதிக்க வைத்து இறக்கி நன்றாக ஆறியதும் போத்தலில் அடைத்து வைத்துப் பயன்படுத்திக் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times

### ஈரானிலிருந்து எண்ணெய் இறக்குமதி – இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையே முறுகல்

ஈரானிலிருந்து எண்ணெய் இறக்குமதிக்கு அமெரிக்கா தடை விதித்துள்ள நிலையில் இலங்கையின் நடவடிக்கைகள் அத்தடையினை மீறுவதாக அமைவதாக வொஷிங்டனிலிருந்து குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இக்குற்றச்சாட்டு இலங்கை அரசுடன் உத்தியோகபூர்வமாக தொடர்பாடப்பட்டுள்ளதாக பொருளாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். சிறிய நாடுகள் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை வழமையாக எதிர்கொள்கின்றன என அமைச்சரவைக் கூட்டத்தைத் தலைமை தாங்கிய சனாதிபதி தெரிவித்துள்ளார். ஆனாலும் மேலும் இரு ஆசிய நாடுகளைக் குறிப்பிட்ட சனாதிபதி அந்நாடுகள் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டால் அவர்களுக்கெதிராக எதுவும் நடக்காது என்றும் தெரிவித்தார்.

பெற்றோலிய வளத்துறை அமைச்சர் வொஷிங்டனில் இக்குற்றச்சாட்டை மறுதலித்தார்.

### தெற்கில் நிலக்கரி வலுத் தொழிற்சாலையை நிறுவும் யப்பான்

யப்பானிய உதவியுடன் மற்றொரு நிலக்கரி வலுத் தொழிற்சாலையை நிர்மாணிக்கவுள்ளதாக மின்சார சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இவ்வலுத் தொழிற்சாலையானது 500 மெகா வோல்ட் மின் உற்பத்தியை மேற்கொள்ளும். இவ்வருட இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ள இத்தொழிற்சாலையின் உருவாக்கப் பணிகள் 1.5 வருடங்களில் நிறைவுக்கு வருமெனத் தெரியவருகின்றது.

### 1000CC ஈருருளிகள் இலங்கையின் தெருக்களில்

1000 உருளைக் கொள்ளளவைக் கொண்ட இரு சக்கர வண்டிகளை இலங்கையில் பாவிப்பதற்கு அனுமதி வழங்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது. எனினும் தெருப் போக்குவரத்து காவல்துறை இம்முடிவுக்கு எச்சரிக்கையினை விடுத்துள்ளது. ஏனெனில் 1000CC ஈருருளி வண்டிகள் இலங்கையில் அனுமதிக்கப்படுமாயின் விபத்துக்களின் எண்ணிக்கை கடுமையாக ஏற்படும் என்றும் குற்றவாளிகளின் நடவடிக்கைகளுக்கும் உதவி புரியும் எனவும் தெரிவித்துள்ளது.



### பொதுநல வாய கூட்டத்தொடரின் செலவைக் குறைக்க முயற்சிக்கும் இலங்கை

றோல்ஸ் றோய்ஸ் கார்கள் மற்றும் BMW 7வது கார்களை பொதுநலவாய கூட்டத்தொடர் தலைவர்களின் மாநாட்டுக்கென கொள்வனவு செய்ய திட்டமிட்டிருந்த இலங்கை அரசு அத்திட்டத்தை கைவிட்டு சொகுசு வாகனங்களை வாடகைக்கு பெறும் திட்டத்தில் இறங்கியுள்ளது. 2013ம் ஆண்டிற்கென பாதீடு செய்யப்பட்ட நிதியை விட கூட்டத்தொடருக்கு மேலதிகமாக ஒரு சல்லிக் காசையேனும் தரமுடியாது என இலங்கையின் திறைசேரி மறுத்துள்ளதைத் தொடர்ந்து இம்முடிவு எட்டப்பட்டுள்ளது. 6 பில்லியன் ரூபாய்களுக்கு திட்டமிடப்பட்டிருந்த இக் கூட்டத்தொடருக்கான செலவு 3.5 பில்லியன் ரூபாய்களுக்கு குறைக்கப்பட்டுள்ளது. 1976ம் ஆண்டில் அணிசேரா நாடுகளின் ஐந்தாவது கூட்டத்தொடரை நடத்திய பின் இலங்கைக்கு கிடைத்துள்ள வாய்ப்பொன்றாக இக் கூட்டத்தொடரை நடத்தும் வாய்ப்பு கருதப்படுகிறது.





### கண்டிக்கு குளிரூட்டப்பட்ட தொடரூந்து

கொழும்பிலிருந்து கண்டிக்கு குளிரூட்டப்பட்ட தொடரூந்தினை இலங்கையின் தொடரூந்து திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

வார இறுதியில் கொழும்பிலிருந்து கண்டிக்கு பெருமளவு மக்கள் பயணிப்பதால் அவர்களை இலக்காகக் கொண்டே இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் கொழும்பிலிருந்து மாலை 5.50 மணிக்கு புறப்படும் படியாகவும் கண்டியிலிருந்து



சனி, ஞாயிறு, திங்கள் கிழமைகளில் காலை 5.50 மணிக்கு புறப்படும் படியாகவும் இத்தொடரூந்துச் சேவை திட்டமிடப்பட்டுள்ளது.

220 இருக்கைகளைக் கொண்ட இத் தொடரூந்திற்கு ஒரு வழிக்கட்டணமாக ரூபா 500 அறவிடப்படவுள்ளது.

### இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே போக்குவரத்து விசா நடைமுறை இலகுவாக்கப்படவுள்ளது

விசா நடைமுறையை இல்லாதொழிக்கும் கலந்துரையாடல்களில் இலங்கை மற்றும் இந்திய உயர்ஸ்தானிகராலயங்கள் ஆரம்பித்துள்ளன. இவ்விரு நாடுகளிடையேயும் விசாவினை முன்னரே விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளும் நடைமுறையினை இல்லாதொழித்து நாடுகளுக்குள் உட்புகும் போது விசா வழங்கும் நடவடிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகளே இடம்பெற்றுவருகின்றன. இந்தியா இவ்வகை விசா நடைமுறையினை தேர்வு செய்யப்பட்ட சில நாடுகளுடன் ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது.


## The Sunday Observer

### கொழும்பில் கூடுதலான டெங்கு

மே மாதத்தில் மட்டும் 157 டெங்கு நோயாளிகள் கொழும்பு மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இன்னும் இத்தொகை கடுமையாக அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாக பிரதான வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். கொழும்பு மாவட்டத்தில் மட்டும் தற்போது வரை 1177 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் அவர்களுள் மூவர் ஏற்கனவே மரணத்தைத் தழுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### யாழ்ப்பாணத்தில் சீமெந்தாலை

சுமார் 75மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் யாழ்ப்பாணத்தில் சீமெந்து ஆலை ஒன்றை அமைப்பதற்கு நேபாளத்தின் பணப்புள்ளி வினோத் சௌத்ரி தனது முன்மொழிவுகளை அரசிடம் சமர்ப்பித்துள்ளார். இத்தகவலை அவரது அலுவலகம் வெளியிட்டுள்ளது. ஏற்கனவே சுமார் 200 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டை மேற்கொண்டுள்ள வினோத் சௌத்ரி இத்திட்டத்தை முன்மொழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



### 20 பேருக்கு மேற்பட்டோர் தொலைந்த ஆண்டாக 2012

இலண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமை நிறுவனமான அம்னஸ்டி இண்டர்நெஷனல் கடந்த வருடம் இலங்கையில் 20க்கும் மேற்பட்டோர் கட்டாயக் காணாமற் போதலுக்குள் உள்ளாகியுள்ளதாக அறிக்கையிட்டுள்ளது. இவர்களுள் அரசியல் செயற்பாட்டாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் ஆகியோர் அடங்குகின்றனர். அத்துடன் மனித உரிமை ஆர்வலர்களையும் மனித உரிமை பாதுகாப்பாளர்களையும் அதனுடன் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளையும் இலங்கை அரசும் அரச ஆதரவாளர்களும் துன்புறுத்தி வருவதாக அம்னஸ்டி இண்டனெஷனல் குற்றஞ்சுமத்தியுள்ளது. இலங்கையில் சட்டரீதியற்ற தடுப்பு துன்புறுத்தல் மற்றும் கட்டாய காணாமற் போதல் போன்றவை தற்போதும் நிகழ்வதாக அவற்றில் ஈடுபடுபவர்களுக்கு எவ்வித தண்டனைகளும் விதிக்கப்படாதிருப்பதாகவும் அம்னஸ்டியின் 2012ற்கான அறிக்கை தெரிவிக்கின்றது. அத்துடன் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையையோ அல்லது ஐ.நா வின் மனித உரிமைச் சபையின் பரிந்துரைகளையோ இலங்கை அரசு நிறைவேற்றத் தயாராயில்லை என்றும் அவ்வறிக்கை தெரிவித்துள்ளது.

### இலண்டனிலிருந்து திரும்பினர் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள்

எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ள பொதுநலவாய தலைவர்களின் கூட்டத்தொடர் தொடர்பான கலந்துரையாடல்களுக்காக இலண்டனுக்குப் பயணமாகியிருந்த வெளிவிவகார அமைச்சுக் குழு நாட்டுக்கு திரும்பியுள்ளது. இக்குழு பொதுநலவாய செயலக அங்கத்தவர்களைக் கண்டு பேசியுள்ளது. இவ்விடயம் தொடர்பாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில் இச்சந்திப்பானது சாதாரணமானது என்றும் இலங்கையில் இக்கூட்டத்தொடரை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் எவ்வாறுள்ளன என்பதை தெரியப்படுத்துவதற்காகவே அவர்கள் அங்கு பயணித்தார்கள் என்றும் தெரிவித்தார்.

### அருங்காட்சியக கள்வர்களை ஏமாற்றிய கள்வன்

கொழும்பு அருங்காட்சியகத்தில் களவு போனதைத் தொடர்ந்து மூவர் கைதாகி விளக்கமறியலில் இருப்பது தெரிந்ததே. இக்கள்வர்களை விளக்கமறியலில் இருந்து வெளியே எடுத்துத் தருவதாகக் கூறி ரூபா 50000த்தை முன்பணமாக மற்றொருவர் பெற்றுள்ளார். அவரும் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். முற்பணம் பெற்ற கள்வன் தானொரு அரச சட்டத்திணைக்கள அலுவலர் என்றும் இம்மூன்று கள்வர்களையும் வெளியே விட வேண்டுமாயின் தனது திணைக்களத்திற்கும் காவல்துறை புலனாய்வுத் திணைக்களத்திற்கும் ்கையூட்டு வழங்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார். இதனை நம்பிய கள்வர்கள் இவருக்கு முற்பணமாக ரூபா 50000த்தை செலுத்தியுள்ளனர். எனினும் அவர்கள் விடுதலை செய்யப்படாததால் முற்பணம் செலுத்தியவர்கள் அவனை அணுகிய போது மேலும் ரூபா 80000 தருமாறு கோரியுள்ளார். இதைத் தொடர்ந்து விடயம் காவல்துறைக்கு தெரியவந்தவுடன் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## The Leader

### அஸாத் சாலியின் உயிருக்கு ஆபத்து

தனது உயிருக்கு உத்தரவாதம் இல்லாதிருப்பதாக தெரிவித்துள்ள முன்னாள் பிரதி மேயர் அஸாத் சாலி இவ்விடயம் தொடர்பாக அமெரிக்க தூதுவருடனும் கனேடிய உயர்ஸ்தானிகருடனும் பேச்சுக்களை நிகழ்த்தியுள்ளதாக தெரிவித்தார். இக்கலந்துரையாடலில் தனது அண்மைய கைது விடுவிப்பு மற்றும் தனக்கான பாதுகாப்பை அரசு வழங்க தவறியிருக்கின்றமை ஆகியவை தொடர்பாக வெளிநாட்டதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளதாக தெரிவித்தார். அத்துடன் இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்புடனும் பேச்சுவார்த்தை நிகழ்த்த அவர் தயாராகி வருவதாக தெரிவத்தார். அத்துடன் இரண்டு அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்களைஅவர் நீதிமன்றத்தில் மனுக்களை அவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கை துடுப்புச் சபை புதிய பிரச்சனைகளை எதிர்கொள்கின்றது

இலங்கைத் துடுப்பாட்டக் குழுவின் ஆதரவாளர்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலையால் சுமார் 500 மில்லியன் ரூபாய்களை இலங்கைத் துடுப்புச் சபை இழக்கும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது. இலங்கையின் துடுப்பாட்டப் போட்டிகளுக்கு ஆதரவளிக்கும் இரு பிரதான ஆதரவாளர்களான டயலொக் அக்ஸியாட்டா நிறுவனமும் இலங்கைத் தேயிலைச்சபையும் காணப்படுகின்றன. இவ்விரு நிறுவனங்களும் இவ்வருடம் ஜூலை மாதம் முதல் இலங்கைத் துடுப்பாட்டக் குழுவிற்கான ஆதரவாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதற்கு முன் மொபிட்டல் நிறுவனமே ஆதரவை நல்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்தவாரம் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்விரு நிறுவனங்களுக்கும் இடையே ஏற்பட்ட முறுகு நிலையால் இலங்கைத் துடுப்புச் சபை மேற்கூறப்பட்ட இழப்பினை எதிர்கொள்ளும் நிலையை அடைந்துள்ளது. மொத்த ஆதரவுத் தொகையாக தீர்மானிக்கப்பட்ட 1.2 பில்லியன் ரூபாய்களில் 700 மில்லியன் ரூபாவை தேயிலைச் சபையும் 500 மில்லியன் ரூபாவை டயலொக் நிறுவனமும் வழங்க உத்தேசித்திருந்தது. தேசிய துடுப்பாட்டக் குழுவினர் போட்டிகளின் போது அணியும் மேற்சட்டையில் இலங்கைத் தேயிலைச் சபையின் சின்னம் பொறிக்கப்பட வேண்டும் என அச்சபை புதிதாக விடுத்த வேண்டுகோளையடுத்தே டயலொக் நிறுவனத்திற்கும் தேயிலைச் சபைக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

# தங்கச் சப்பாத்து விருதை வென்றார் வான் பெர்சி

ஐரோப்பிய சாம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரில் பேயர்ன் முனிக் அணி சாம்பியன் பட்டம் வென்றது.

பிரிட்டன் தலைநகர் லண்டனில் நடந்த சாம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் இறுதிச்சுற்றில் பொருசியா டார்ட்மண்ட், பேயர்ன் முனிக் அணிகள் மோதின. இதன் முதல் பாதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை. விறுவிறுப்பான இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட பேயர்ன் முனிக் அணியின் மரியோ மான்ட்சுகிக் 60வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். இதற்கு பதிலடியாக பொருசியா டார்ட்மண்ட் அணியின் கன்டோகன் 68வது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை கோலாக மாற்றி அசத்தினார் மீண்டும் தனது ஆதிக்கத்தை தொடங்கிய பேயர்ன் முனிக் அணிக்கு 89வது நிமிடத்தில் அர்ஜென் ராபின் ஒரு கோல் அடித்து வெற்றியை உறுதி செய்தார்.

இதற்கு பொருசியா டார்ட்மண்ட் அணியால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முடிவில், பேயர்ன் முனிக் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது.

# "பொன் அணிகளுக்கான சமர்"

திருகோணமலை இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கும் மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்திற்கும் இடையிலான "பொன் அணிகளுக்கான சமர்'' என வர்ணிக்கப்படும் துடுப்பாட்டப் போட்டி 30.05.2013 வியாழக்கிழமையன்று மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சிவானந்தா அணியினர் 175 ஓட்டங்களை கோணேஸ்வரா அணிக்கு வெற்றிக்காக நிர்ணயித்தனர். நான்கு இலக்குகள் மீதமிருந்த நிலையில் கோணேஸ்வரா அணியினர் அவ் ஓட்ட எண்ணிக் கையைக் கடந்து வெற்றியீட்டியுள்ளனர்.



இலங்கைக் கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் நிறுவனத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த இரண்டு மாணவிகள்



aat SRI LANKA

Passed Finalist



Ms. Vitharani

Ms. Madunika

வேல் வர்த்தகக் கல்லூரி
இல. 159A, கடல்முக வீதி
0262227622 திருகோணமலை, 777 555 738






சொல்லியிருந்தால் அன்று அந்தக் கொலை நிகழாது போயிருக்கலாம்......

கேதீஸின் மனைவியின் தம்பியின் நண்பனுடன் அளவாளாவிய பொழுதில் கேதீஸின் மாமியும் அம் மாமியின் அக்காவும் கேதீஸின் மனைவியின் வீட்டிற்கு வந்துள்ளார்கள்.

அவர்களும் அந்தப் பிரதான படலையைக் கடக்கும் போது இருள் சூழ்ந்திருந்த அந்தப் பிரதான படலையின் அருகில் கடுமையான சிகரெட் வாசனையை முகர்ந்துள்ளார்கள். காரிருட்டு, சிகரெட் வாசனை இரண்டுமே அவர்களை மெலிதாகப் பயங்கொள்ளச் செய்துள்ளது. வேகமாக அவர்கள் தமது ஸ்கூட்டி பெப்ட் வண்டியில் வீட்டிற்கு வந்து விட்டார்கள்.

கொலைகாரர்கள் தமது பொறுமையை இழந்திருந்தார்கள். இன்று எப்படியாவது முடித்துவிட வேண்டும் என்ற அவர்களது எண்ணம் நிறைவேறாமலே போய்விடும் போல இருந்தது. முதலில் ஈருருளிச் சத்தம் கேட்டபோது அவர்கள் தயாரானார்கள். ஆனால் அது கேதீஸ் அல்ல. பின்னர் ஈருருளியின் சத்தம்.... கொலைஞர்கள் வேகமாக சிகரெட் நெருப்பை அணைத்துத் தயாரானபோது வந்தது இரண்டு பெண்கள்... அவர்கள் சினமடையத் தொடங்கியிருந்தனர். கொலைஞன் ஒருவனின் கைத்தொலைபேசி யாரோ ஒருவருடன் தொடர்பிலேயே இருந்தது. தொலைதூர அழைப்பு என்பதால் அவனால் நீண்டநேரம் அத் தொலைபேசியிற் பேச முடியவில்லை. மீண்டும் பணத்தை நிரப்புவதற்காக தொலைபேசி அட்டையொன்றை எடுத்துச் சுரண்டி கைத்தொலைபேசியை மீள் நிரப்பிய கணத்தில் ஈருருளியொன்று



இயக்கப்படும் ஒலி தெளிவாகக் கேட்டது. கொலைஞர்கள் தயாராக மீண்டும் அக் கொலைஞனது தொலைபேசி அதிர்ந்தது. கையிலிருந்த மீள்நிரப்பிய அட்டை கீழே விழ ..... அத் தொலைபேசி அழைப்பைப் பேசினான் அக் கொலைஞன்........

கேதீஸ் இப்போது தனது வீட்டிற்குப் போவதற்குத் தயாராகி விட்டான். அதோ அவன் தனது ஈரூர்தியை இயக்கும் சத்தம் எல்லோருக்கும் கேட்டுவிட்டது. அந்தச் சின்ன ஒழுங்கையீடாக அவனது ஈரூர்தி சில அடிகள் சென்றவுடன் நின்று விட்டது. தனது தலைக்கவசத்தைக் கழற்றிய அவன் கைத் தொலைபேசியில் அழைப்பொன்றுக்கு பதிலளிக்கின்றான்.

" ஓம்...நான் வெளிக்கிட்டன்... ஒழுங்கைக்குள்ள நிக்கிறன்.... பத்து நிமிசத்தில போயிருவன்....."

ஆம் அவன் பத்து நிமிடங்களில் இந்த உலகை விட்டுப் போய் விட்டான்.

அதிர்ந்த தனது தொலைபேசியில் அழைப்பை ஏற்றுக் கொண்ட கொலைஞனுக்கு கேதீஸின் வருகையை உறுதி செய்தது. "வாரான்....ஒழுங்கைக்குள்ள நிக்கிறது கேதீஸ் தான்".

தங்களது சிகரெட் தலைகளின் தீயை அணைத்த கொலைகாரர்கள் இருளின் ஊடே பிரதான படலையை நோக்கித் தயாராக நகர்ந்தனர்.

கேதீஸ் சரியாக அந்நேரத்தில் பிரதான படலையை அண்மித்தான். ஈருருளியில் இருந்து எழுந்து நின்று படலையில் மேல் கொழுவியை அகற்ற முனைந்த கணத்தில் 'அவுர்கள் இருவரும் அவன் முன்னே தோன்றினார்கள்.

கேதீஸின் உள்ளுணர்வுகள் விழித்துக் கொண்டன. கள்வர்கள்..... கள்வர்கள்....

" நாங்கள் காவல்துறையைச் சேர்ந்தவர்கள்... உன்னை விசாரிக்க வேண்டும்...." வளர்ந்த கொலைஞன் கேதீஸை அணுகினான். அவர்கள் காவல் துறையினரா?...ஒரு கணப் பொழுது கேதீஸ் தன் உள்ளுணர்வுகளை புறந்தள்ளினான்.

அக்கணமே அவன் சாவின் முதல் எழுத்து வரைந்த கணமானது.

இரண்டாவது கொலைஞன் அக் கணத்தில் வேகமாக தன்னிடமிருந்த கத்தியால் கேதீஸை நோக்கி முதலாவது வீச்சை மேற்கொண்டான்.

" ஓடு.... கேதீஸ்...ஓடு..."

கேதீஸின் உள்ளுணர்வுகள் அலறத் தொடங்கியது. அவன் தனது உருளியை விட்டு வேகமாக எழும்ப... கத்தி சரியாக அவனது கன்னப்பகுதியை அறுத்தது. அத்துடன் அவனால் கத்த முடியாமல் போய்விட்டது. என்றாலும் தனது வலுவைச் சேர்த்துக் கொண்டு உருளியை விட்டு ஓடத் தொடங்கிய ஓரிரு அடிகளின் பின் கொலைஞன் ஒருவன் அவன் கால்களைத் தட்டிவிட நிலத்தில் விழுந்த அவன் தனது பலம் முழுவதையும் திரட்டி ஓலமிடத் தொடங்கினான்...... ஆனால் கன்னம் அறுந்திருந்ததால் ஓலம் உறுமல்களாக வெளி வரத் தொடங்கியது.

அயல் வீட்டிலிருந்த வயதான பெண்ணிற்கு இனம் புரியாத உறுமலொன்று கேட்கத் தொடங்கியது. அவர் பயத்தினால் எதுவும் செய்யாது வீட்டினுள் ஒளிந்து கொண்டார்.

அவர் தனது வீட்டின் மின் விளக்கொன்றை ஏற்றியிருந்தால்.......

(தொடரும்)

மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ விநியோகத்தர்கள் – திருமலை நகர லியோ கழகத்தினர்
The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் 01.06.2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.